# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 22 புதன்கிழமை (07.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354

## சந்தனப்பேழையில், குண்டுகள் முழங்க பூரண அரச மரியாதையுடன்



# எம்.ஜி.ஆர் நினைவு வளாகத்தில் ஜெயலலிதாவின் உடல் நல்லடக்கம்

04ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம்

# பகிரங்க மன்னிப்பை கோரிய பிரதமர்!



(கொழும்பு)

யாழ்.பொதுநூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் பிழையானது. அதற்காக நாம் மன்னிப்பு கோருகிறோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

04ஆம் பக்கம்

## யாழ்.வர்த்தகர்கள் கடைகளை பூட்டி துக்கம் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை பூட்டி துக்கம் அனுஷ்டித்தனர் இதன்போது யாழில் கறுப்புக் கொடிக

23ஆம் பக்கம் பார்க்க....

## மறைந்த தமிழக முதல்வருக்கு வடக்கு மாகாண சபையில் அஞ்சலி

### மாகாண கொடி அரைக் கம்பத்தில்



(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடக்கு மாகாண சபையின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. அத்தோடு சபை அமர்வில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலியும் செலுத்தினர். இதன் பின்னர் சபை இன்றைய தினம் வரையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 67ஆவது அமர்வு நேற்றைய தினம் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக காலை ஒன்பது மணி

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயலலிதாவை ஈழத்தமிழர்கள் நன்றியுடன் நினைவு கூருவர்

### தமிழ் மக்கள் பேரவை துயர்பகிர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமின் மறைவை யொட்டி தமிழ் மக்கள் பேரவை இரங்கல் செய்தி விடுத்துள்ளது.

பேரவையின் இரங்கல் செய்தியில், தமிழக முதலமைச்சர் செல்வி.

23ஆம் பக்கம் பார்க்க....

## எழுதுமட்டுவாழ் பகுதியில் எறிகணைகள் நேற்று மீட்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் தோட்டக்காணி ஒன்றில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 60 மில்லி

23ஆம் பக்கம் பார்க்க....

# அரசியல் வானில் பிரகாசித்த வால்வெள்ளி மறைந்துவிட்டது

### வடக்கு முதல்வர் ஜெயாவிற்கு இரங்கல்



(யாழ்ப்பாணம்)

அரசியல் வானில் பிரகாசித்த வால்வெள்ளி ஒன்று மறைந்துவிட்டது என மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமின் இரங்கல் செய்தியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

23ஆம் பக்கம் பார்க்க....

## தொடர்ந்தும் எதிர்க் கட்சி தலைவராக தவராசா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவராக தொடர்ந்தும் சின்னத்துரை தவராசா செயற்படுவார் என முடிவு எட்டப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின்

23ஆம் பக்கம் பார்க்க....




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# நெல்லியடி வர்த்தகர்கள் பூட்டு

(கரணவாய்)

மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வடமராட்சி நெல்லியடியில் உள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று பிற்பகல் 2.00 மணியுடன் மூடப்பட்டது.

மறைந்த முதலமைச்சருக்கு அஞ்சலி செலுத தும்முகமாக நெல்லியடி வர்த்தக சங்கத்தினால் விடுக்கப்பட்ட அறிவித்தலை ஏற்று அங்குள்ள வர்த்தக நிலையங்கள் பிற்பகல் 2.00 மணியுடன் மூடப்பட்டது. மேலும் பழைய சந்தை வாசலகளில் துக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக கறுப்புக்கொடியும் கட்டப்பட்டிருந்தது. (செ-60)

## பெயர் மாற்றம்

இராஜகாரியார் வீதி மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட தர்மராசா தங்கராணி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் தர்மராசா தங்கமணி என பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் தர்மராசா தங்கராணி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(6848) உண்மையுள்ள - தர்மராசா தங்கராணி

## கண்ணீர் அஞ்சலி

### வைத்திலிங்கம் இராசேந்திரம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறையின் புவியியற்கழக பெரும் பொருளாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் **திருமதி பிரதீபா விபுலன்** அவர்களின் அன்புத்தந்தை **வைத்திலிங்கம் இராசேந்திரம்** அவர்கள் 06.12.2016 அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி விப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6856)

**புவியியற்கழகம், புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-6588)

இருவீட்டுடன் காணி விற்பனைக்கு
3 3/4 பரப்புக்காணி
இருவீட்டுடன் நாச்சிமார்
கோவில் அண்மையில்
விற்பனைக் குண்டு.
(6858)
தரகர்கள் தேவையில்லை
தொடர்பு :- 0713183676

## கண்ணீர் அஞ்சலி

### வைத்திலிங்கம் இராசேந்திரம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் **திருமதி பிரதீபா விபுலன்** அவர்களின் அன்புத்தந்தை அமரர் வைத்திலிங்கம் இராசேந்திரம் அவர்கள் 06.12.2016 அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.



(6857)

**பேராசிரியர், விரிவுரையாளர்கள், கல்விசார ஊழியர்கள் மற்றும் மாணவர்கள், புவியியற்றுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்





**திரு.வைரமுத்து நல்லராசா**
&
**திருமதி தவமலர்தேவி நல்லராசா**

அன்புடையீர்!

அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்குகளான அமரர்கள் வைரமுத்து நல்லராசா திருமதி தவமலர்தேவி நல்லராசா தம்பதியரின் அந்தியேட்டிக் கிரியைகள் துன்முகி வருடம் கார்த்திகை மாதம் 23ஆம் திகதி (08.12.2016) வியாழக்கிழமை காலை 5.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

(C-6595)

வதிரி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

இங்ஙனம் :- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### தம்பு நல்லநாயகம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கவிட்சர்லாந்து மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பு நல்லநாயகம் அவர்கள் 01.12.2016 அன்று கொழும்பில் அவரது இல்லத்தில் இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - கனகம்மாவின் மருமகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், சோதிவேல்பிள்ளை (ஜேர்மனி), கமலாதேவி (ஹொலண்ட்), காலஞ்சென்ற இராசம்மா (விமலா - ஆசிரியை), குணநாயகம் (ஜேர்மனி), நிர்மலாதேவி (கனடா), ராமநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சாரதாம்பிகை (ஆசிரியை - ஜேர்மனி), ரவிந்திரநாத் (பிரான்ஸ்), சிவபரஞ்சோதி (ஆசிரியர், JP), செல்வராணி (ஜேர்மனி), பரமநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சுஜநந்தினி (ஜேர்மனி), சுதாகரன் (பிரான்ஸ்), ரமேஷிகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குருமூர்த்தி, பாலினி, டிலானி ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஷா, அரவிந், அனுஷ்கா, ஜஸ்வின், பிரவின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று காலை 10.00 மணியளவில் இல. 50, நாவலர் வீதி (மனோகரா தியேட்டர் பின்புறம்) இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- - குடும்பத்தினர்

0775316120

(C-6594)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் தம்பிமுத்து செல்வரட்ணம்

தோற்றம் 1949.04.16

மறைவு 2014.11.30



எம் நிலையோடு நினைவாகி
கனவோடு கனவாகி
உணர்வோடு உணர்வாகி உயிரோடு உயிராக
கலந்த எம் அப்பாவே

பாசத்தின் சுமையோடு எம்மை இங்கே பரிதவிக்க
விட்டு நீங்கள் மட்டும் நெடுந்தூரச் சென்றது ஏன்?
ஆணிவேராய் எம்மைக்காத்து நின்ற எங்கள்
தெய்வமே 2 ஆண்டுகள் ஆகியும் ஆறவில்லை எம்
மனம் விழிகளில் கண்ணீர் காயவில்லை காலங்கள்
கடந்தாலும் மாறாது உங்கள் நினைவலைகள் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சரோஜா பவனம்
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
077 311 0179

தகவல்:- - குடும்பத்தினர்

(C-6594)




## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நீதிமன்றம் அழைப்பாணை



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன நேற்று முன்தினம் அழைப்பாணை பிறப்பித்தார்.

2015ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில், அப்போது பொது வேட்பாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவினதும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் போலிக் கையெழுத்துகளைக் கொண்ட ஆவணத்தைத் தயாரித்து அவற்றைக் காட்சிப்படுத்திய குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் முறைப்பாட்டாளர் சார்பில் சாட்சியாளராக பெயர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கில் முறைப்பாட்டாளர் தரப்பில் இவ்விரு சாட்சியாளருக்கும் மேலதிகமாக இன்னும் 15 பேருக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்த வழக்கை மார்ச் 20 ஆம் திகதி முதல், தினந்தோறும் விசாரணை நடத்த நீதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# காலத்துக்கு காலம் ஈழத்தமிழருக்காக ஓங்கிக்குரல் கொடுத்தவர் ஜெயலலிதா

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இரங்கல்

காலத்துக்குக் காலம் இலங்கை வாழ் தமிழ்மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்து வந்தவர் ஜெயலலிதா.

அவரது மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் மனவேதனையும் அடைவதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமின் மறைவையொட்டி அவர் அனுப்பியுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்களது மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றேன்.



முதலமைச்சராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரனின் மறைவைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் பெருவெற்றியைப் பெற்றதன் மூலம் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1996 ஆம் ஆண்டு மே மாதம் வரை முதலமைச்சராக முதலாவது தடவையாகப் பதவி வகித்தார்.

அதனைத் தொடர்ந்து ஆறாவது தடவையாக மே 2016 ஆம் ஆண்டு முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மறையும் வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்தார்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தமிழக மக்களுக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் சார்பிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-9)

## ஜெயலலிதாவுக்கு மகிந்த இரங்கல்

(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் மரணம் குறித்து இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்திய தமிழ் சமூகத்தின் இதயங்களை கைப்பற்றிய தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உறவினர்கள் மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கு தனது இரங்கலை மகிந்த தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியை தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதிவேற்றம் செய்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மாரடைப்பினால் மரணமடைந்துள்ள நிலையில் பலரும் தமது இரங்கல் செய்தியை வெளியிட்டு வருகின்றனர். (இ-7-10)

## பிரபல பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி அடுத்த வாரம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பிரபல பாடசாலைகளுக்கு உள்வாங்கும் வெட்டுப்புள்ளிகள் இவ்வாரத்திற்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாணவர்களின் புள்ளிகள் கணனியில் பதியும் நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

அடுத்த ஜனவரி மாதம் முதல் பிரபல பாடசாலைகளுக்கு பிள்ளைளை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7-10)

## சாதாரண தரப் பரீட்சை நிலையங்களுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்பு

(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சை நிலையங்களுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நேற்றைய தினம் முதல் நடைபெறுகிறது.

பரீட்சை நடைபெறும் அனைத்து பரீட்சை நிலையங்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய பொலிஸார் நேற்று முதல் சகல பரீட்சை நிலையங்களிலும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பரீட்சை நிலையங்களுக்கு அருகாமையில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். (இ-7-10)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவுடன் ஜனவரியில் பேச்சு

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான எல்லைப் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் ஜனவரி மாதம் இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவிருப்பதாக மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்டுகின்ற படகுகள் விடுவிக்கப்படாததனாலும், இந்திய மத்திய அரசாங்கம் தமது நாட்டு மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதை ஏற்றுக்கொண்டதனாலும் அண்மைக்காலமாக தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் 50 வீதத்தில் குறைவடைந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர, இலங்கை - இந்திய மனவர்களின் பிரச்சினை பற்றி சபையில் விளக்கமளித்தார்.

"இந்திய மத்திய அரசாங்கம் முதன்முறையாக தமது நாட்டு மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த முறை பேச்சுவார்த்தையின்போது இந்த விடயத்தை அவர்களே குறிப்பிட்டிருந்தார்கள். அத்தோடு எல்லை மீறுகின்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வதோடு அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஒரு படகையேனும், ஒரு வலையையேனும் திரும்ப வழங்கவில்லை. அதன் காரணமாக அந்த மீனவர்களின் அத்துமீறல்கள் 50 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளமை எமக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். ஆகவே எதிர்காலத்திலும் இந்த நடவடிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். அதேபோன்று எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்திய மத்திய அரசாங்கத்துடன் மீனவப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தையும் நடத்தவிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## பசில் ராஜபக்ஷவிற்கு எதிரான வழக்கு வாபஸ்

முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, சட்டமா அதிபரினால் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திவிநெகும நிதி மோசடி வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ, திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான வழக்கே வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களத்திற்குச் சொந்தமான 29 மில்லியன் ரூபாயை பயன்படுத்தி 5 மில்லியன் புதுவருட நாள்காட்டியை அச்சிட்டு விநியோகித்தமை தொடர்பாக இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த இருவருக்கும் எதிரான வழக்கு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரினால் உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பசில் ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# ஜெயலலிதாவை...

செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள். வெளிநாடொன்றின் சட்டமன்றில் எமது மக்களின் நீதிக்கான கோரிக்கையை வெளிப்படுத்தி தீர்மானம் நிறைவேற்றியமை, எமக்கு மிகப்பெரிய பலமாக அமைந்திருந்தது. இனியும் அமையும். இதற்காக அவர் எத்தனையோ சவால்களை எதிர்கொண்டிருந்த போதிலும், தன் மக்கள் பிரதிநிதிகளின் துணை கொண்டு அவற்றை நிறைவேற்றியிருந்தார்.

எம் தமிழக உறவுகள், தம் சகோதர உணர்வால் எம்மை அணைத்துக்கொண்ட நிகழ்வுகளாகவே நாம் அதனை பார்க்கின்றோம்.

இவற்றிற்கு அப்பால் செல்வி ஜெ. ஜெயலலிதாவின் ஆளுமையும் பலருக்கு முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது.

பெண் ஒடுக்குமுறை நிறைந்த தென்னாசிய சமூகத்தில் இருந்து வெளிக்கிளம்பிய ஒரு மிகச்சிறந்த பெண் ஆளுமையாக அவரை நாம் பார்க்கின்றோம். தன் தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் வாழ்விலும் எதிர்கொண்ட தடைகளை நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டு, தனக்கான பாதையை தானே அமைத்துக்கொண்ட தீர்க்கமான ஒரு இரும்புப் பெண்மணியாகவே அவரை நாம் பார்க்கின்றோம்.

பெண் ஒடுக்குமுறை மலிந்த ஒரு சமூகத்தில் இருந்து வெளிவந்து, தன் ஆளுமையை வெளிக்காட்டி உயர்ந்து நின்ற அவரின் ஆளுமை, அனைவருக்கும் ஒரு உதாரணமாக அமைகிறது.

இழப்பின் துயரத்தை அறிந்தவர்கள் நாங்கள் . இந்த ஆளுமையின் இழப்பு தமிழக மக்களை பொறுத்தவரையிலும் உலகத் தமிழ் மக்களை பொறுத்தவரையிலும் ஈடுசெய்யப்பட முடியாதது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் தாய்த் தமிழக மக்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களை மீண்டும் தெரிவிப்பதுடன், உங்கள் துயரில் நாமும் பங் கெடுத்துக் கொள்கிறோம் என தமிழ் மக்கள் பேரவை இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளது. (செ-11)

# எம்.ஜி.ஆர் நினைவு வளாக...

மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் உடல், முழு அரசு மரியாதையுடன் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

சென்னை அப்பலோ மருத்துவமனையில் 70 நாட்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்றுவந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் உயிர் நேற்று முன்தினம் பின்னிரவில் பிரிந்தது. அவரது உடலை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் நேற்று மாலை நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதேசமயம், அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த தலைவர்கள் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்தினர். பல லட்சக் கணக்கான பொதுமக்களும் ராஜாஜி அரங்க வளாகத்துக்கு திரண்டு வந்து ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

டில்லியில் இருந்து சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் ஜெயலலிதாவின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ஜெயலலிதாவின் உடல் அருகே சோகமாக நின்றிருந்த முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சசிகலா ஆகியோருக்கு பிரதமர் ஆறுதல் கூறினார்.

மாலை 4 மணியளவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் ஜெயலலிதாவின் உடலுக்கு மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அதன்பிறகு, ஜெயலலிதாவின் உடலை இந்திய இராணுவ முப்படை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர். ராஜாஜி மண்டபத்தின் வாசலில் தயார்நிலையில் இருந்த அலங்கரிக்கப்பட்ட இராணுவ பீரங்கி வாகனத்தில் ஜெயலலிதாவின் உடல் ஏற்றப்பட்டது.

மாலை 4.25 மணியளவில் இராணுவ வாகனம் மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடம் நோக்கி புறப்பட்டது. அப்போது, அங்கு கூடியிருந்த அ.தி.மு.க. தொண்டர்களும், பொதுமக்களும் துக்கம் தாங்க முடியாமல் கதறி அழுதனர். இராணுவ வாகனத்தில் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், சசிகலா மற்றும் அவரது உறவினர்கள் இருந்தனர். ஊர்வலத்தில் தமிழக அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல். ஏ.க்கள், கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் என லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். ஊர்வலப் பாதையில் சாலையின் இருபுறத்திலும் திரண்டிருந்த பொதுமக்கள் கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தினர்.

ராஜாஜி அரங்கில் தொடங்கிய இறுதி ஊர்வலம் வாலாஜா சாலை வழியாக காமராஜர் சாலையை சென்றடைந்தது. அங்கு எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்துக்கு ஊர்வலம் சென்றடைந்தது.

ஜெயலலிதாவின் உடல் இராணுவ வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு, அடக்கம் செய்யப்படும் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு சந்தனப்பேழையில் வைக்கப்பட்டது. அப்போது ஆளுநர் வித்யாசாகர் ராவ் இறுதி மரியாதை செலுத்தினார். முப்படை வீரர்களும் இறுதி மரியாதை செலுத்தினர். மத்திய அரசு சார்பில் வெங்கையா நாயுடு, பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அதன்பின்னர் புதிய முதல்வராக பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வம், சபாநாயகர் தனபால், முன்னாள் ஆளுநர் ரோசய்யா, காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி, தமிழ்நாடு காங்கிரஸ் தலை வர் திருநாவுக்கரசர், குலாம் நபி ஆசாத், முகுல் வாஸ்னிக் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இறுதி அஞ்சலிக்குப்பிறகு அவர் மீது போர்த்தப்பட்டிருந்த தேசியகொடி எடுக் கப்பட்டு சசிகலாவிடம் வழங்கப்பட்டது. இதையடுத்து, ஜெயலலிதா உடலுக்கு சசிகலா இறுதிச் சடங்கு செய்தார். அதன் பின்னர் 60 குண்டுகள் முழங்க பூரண அரச மரியாதையுடன் ஜெயலலிதாவின் உடல் மாலை 6.07 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

*(மேலும் செய்திகள் உள்ளே)* (செ-11)


## வீடு வாடகைக்கு

திருமணம் மற்றும் சுபகாரியங்கள் தங்கி நின்று செய்வதற்கு சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நாள், கிழமை அடிப்படையில் வாடகைக்குண்டு (6860)

**077 703 5457**



## ஓராண்டு நினைவுகளுடன்...

மலர்வு 23 ✡ 01 ✡ 1948



உதிர்வு 19 ✡ 11 ✡ 2015

05ஆம் வட்டாரம், வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட

**திருமதி கனகரத்தினம் இரஞ்சிதமலர்**

திதி 2016.12.07

*பன்னிரண்டு திங்கள் பார்த்திருக்கப் பறந்ததம்மா!... எங்கள்*
*எண்ணங்கள் சிந்தனைகள் அத்தனையும் நீங்களம்மா!*
*மறக்கத்தான் முடியுமா... எம்மால் மகிழ்வுடன் இருக்கத்தான் முடியுமா!*
*ஆறாத்துயர் சுமந்து வெந்தணலில் வேகின்றோம்*
*எத்தனை யுகம் சென்றாலும் – எம் இதய தெய்வம் நீங்களம்மா!*

(C-6595)

*ஓம் சாந்தி.. ஓம் சாந்தி.. ஓம் சாந்தி...*

கந்தன் கருணை,
5ஆம் வட்டாரம்,
வேலணை-5

பிரிவில் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்


# பகிரங்க மன்னிப்பை...

நாடாளுமன்றில் நடைபெற்று வரும் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நேற்றைய தினம் பங்கேற்று உரையாற்றிய போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டமைக்காக வருந்துகின்றேன். இதேபோல் கூட்டு எதிர்க்கட்சியினரும் தமது காலத்தில் செய்த பிழைகளுக்காக மன்னிப்பு கோர வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை ஆட்சி செய்த 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. இது பிழையான செயல் என்பது எமக்குத் தெரியும், அதற்காக தற்போது மன்னிப்பு கோருகின்றோம் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதன்போது பிரதமரை கேலி செய்த கூட்டு எதிர்க்கட்சியினரைப் பார்த்து பிரதமர் இவ்வாறு கூறினார். "உங்களது ஆட்சிக் காலத்தில் நீங்கள் இழைத்த தவறுகளுக்காக நீங்களும் மன்னிப்பு கோர வேண்டும்" என்றார்.

ஆசியாவிலேயே புகழ்பெற்று விளங்கிய யாழ்ப்பாணம் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட துன்பியல் சம்பவம் 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி இடம்பெற்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளின் ஒட்டுமொத்த உதாரணமாகவே யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை சர்வதேசம் அந்நாளில் நோக்கியது.

இலங்கையின் இனப் பிரச்சினையானது மற்றொரு பரிமாணத்துக்கு இட்டுச் செல்லப்படுவதற்கு யாழ். நூலக எரிப்பு சம்பவமும் காரணமாக அமைந்திருந்தது எனலாம்.

தென் கிழக்கு ஆசியாவிலேயே முதன்மையான பொது நூலகமாக யாழ் நூலகம் விளங்கியது. இங்கு வைக்கப்பட்டிருந்த பல நூல்கள் உலகின் வேறெந்த நூலகத்திலும் காணக்கிடைக்காதவையாகும்.

இலக்கியம், இலக்கணம், அறிவியல், வரலாறு என்றெல்லாம் பல்வேறு துறை சார்ந்த பெறுமதியான நூல்கள் இங்கே இருந்தன.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் தனிப்பட்டவர்களிடம் இருந்து வந்த பல நூல்கள், குறிப்பாக நூற்றாண்டுகள் பழைமையான ஓலைச்சுவடிகள் 1800களில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் போன்றவை இந் நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன.

நூலகத்தின் முதலாவது கட்டடம் 1959ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அனைத்தும் ஒரே நாளில் சாம்பலாகிப் போனது.

இலங்கை தமிழ் மக்களை மாத்திரமின்றி உலகத்தையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது இந்த நிகழ்வு.

யாழ்ப்பாணம் பொது நூலகம் சுமார் 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்தது.

நூலகம் எரிக்கப்பட்டமை இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் அழியாத காயம் ஒன்றை ஏற்படுத்தி, தமிழ்த் தேசியப் போக்குக்கு உரம் ஊட்டியது.

யாழ். நூலகம் 1933ஆம் ஆண்டில் இருந்து கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளது.

முதலில் சிலரது தனிப்பட்ட சேகரிப்புகளுடன் நூலகம் ஆரம்பிக்கப்பட்டு மிக விரைவில் உள்ளூர் தமிழ் மக்களின் ஆதரவுடன் ஒரு முழு நூலகமானது.

இந்த நூலக எரிப்பு வன்கும்பலில் இலங்கையின் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் காமினி திசாநாயக்க உட்பட வேறு பல அப்போதைய தென்பகுதி அரசியல் தலைவர்கள் அடங்கியிருந்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

# யாழில் 'ஜெயா'வுக்கு அஞ்சலி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு யாழ் மக்கள் அஞ்சலி செலுத்துவதற்கான விசேட ஏற்பாடு ஒன்றை யாழ் இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்தவகையில் யாழ் மருதடி வீதியிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் அனுதாபப் பகிர்வு புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண சபை அவைத்தலைவர், வடமாகாண அமைச்சர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், யாழ் மாவட்ட அரச அதிபர், யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆகியோர் அங்கு சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் அனுதாப பகிர்வினை குறிப்பேட்டில் பதிவு செய்திருந்தனர்.

அதனைத்தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள், உயர் அதிகாரிகள், சிவில் சமூக அமைப்பினர் பொதுமக்கள் பலர் ஜெயலலிதாவின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி அப்புத்தகத்தில் தங்களது அனுதாபங்களை பதிவு செய்து வருகின்றனர். இன்றில் (நேற்று) இருந்து மூன்று நாட்களுக்கு மக்கள் அஞ்சலியை செலுத்த முடியும் என இந்திய துணைத் தூதரகம் அறிவித்துள்ளது. (செ-9)

# த.தே.ம.முன்னணி ஜெயாவுக்கு இரங்கல்

(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளதுடன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்துக்குச் சென்று இரங்கல் செய்தியை பதிவு செய்திருந்தது.

கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், உபதலைவி திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் துணைத் தூதரகத்துக்கு நேரில் சென்று இரங்கல் செய்தியை பதிவு செய்திருந்தனர். (செ-4)

# கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்க தீவிர முயற்சி

(கொழும்பு)

ஏமன் கடற்பரப்பில் வைத்து ஆயுததாரிகளினால் கடத்திச்செல்லப்பட்ட 9 இலங்கை பிரஜைகளையும் காப்பாற்றுவதற்காக இந்தியாவின் ஒத்துழைப்பை கோரியிருப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஏமன் அரசாங்கத்திற்கு சொந்தமல்லாத சர்வதேச கடற்பரப்பில் வைத்தே இவர்கள் கடத்தப்பட்டிருப்பதாகவும், தொடர்புகொள்ள முடியாத எல்லையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் மீட்பு நடவடிக்கைகள் தாமதமடைந்து வருவதாகவும் வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஏமன் நாட்டைச் சேர்ந்த சரக்கு கப்பல் ஒன்றில் பணிபுரிகின்ற 9 இலங்கை பிரஜைகள் அண்மையில் ஆயுததாரிகளினால் பணயக் கைதிகளாக கடத்திச் செல்லப்பட்டனர்.

குறித்த பணயக்கைதிகள் தொடர்பாக நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 23 இன் கீழ் இரண்டிற்கு அமைய நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன வெளிவிவகார அமைச்சரிடம் கேள்வி தொடுத்தார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சபையில் இல்லாதிருந்ததினால் இதற்காக பதிலை வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா வழங்கினார்.

கடத்திச்செல்லப்பட்டுள்ள 9 இலங்கை பிரஜைகளும் ஏமன் நாட்டிலுள்ள கீ ஒயிலான் என்ற தனியார் நிறுவனமொன்றிற்குச் சொந்தமான சரக்கு கப்பலில் பணிபுரிந்து வருபவர்கள். இவர்கள் ஏமன் நாட்டிற்கு சொந்தமல்லாத சர்வதேச கடற்பரப்பில் வைத்து ஆயுததாரிகளால் பணயக் கைதிகளாக கடத்தப்பட்டுள்ளனர்.

எனினும் இவர்களை பணிக்கு அமர்த்திய நிறுவனம் கூட இதுவரை முன்வரவில்லை. எவ்வாறாயினும் டுபாய் மற்றும் ஏமன் அரசாங்கங்களிடம் அவர்களை மீட்பதற்கான உதவியை கோரியிருப்பதோடு இந்திய அரசாங்கத்திடமும் உதவி கோரியிருக்கின்றோம். மிக விரைவில் அவர்களை மீட்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


## மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் நலன்கருதி நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு 05/12/2016- 31/12/2016 வரை விசேட விலைக்கழிவுகளில் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலை வஷ்சர்களுக்கும் சீருடைத் துணிகள் வழங்கப்படும்.

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.021 222 2381

## பொதுக்கூட்டம்

மேற்படி புனருத்தாரண தொண்டர் சபைக் கூட்டம் 11.12.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் கோவிலில் நடைபெறும். கூட்டத்திற்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் அவர்களும் பகுதி கிராம சேவையாளரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். எனவே கணையவிற் பிள்ளையார் கோவில் உபயகாரர்கள், ஆலய புனருத்தாரண பணிகளில் ஆர்வம் உடையவர்கள் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
தையிட்டி கணையவிற் பிள்ளையார் கோவில்,
புனருத்தாரண தொண்டர் சபை.
(ஆதீன கர்த்தா) (6834)

## விற்பனைக்கு

பிறொயிலர் சுத்தம் செய்தது 1kg Rs.350/- அத்துடன் கல்பேட், ஊர்ச்சேவல், பேரன்ஸ் கோழி வகைகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- தாசன்பாம்,
158/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (6843)





## இராசி பலன்

07.12.2016
(கார்த்திகை 22, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.25 மணிவரை
சுபம் முற்பகல் 8.00 மணிவரை
சுபநேரம் 4.47-6.17 மணிவரை
இராகுகாலம் 12.17-1.47 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் சந் | கிரகநிலை | | |
| சுக் | சந்திராஷ்டமம் பூரம் இரவு 1.08 மணிக்கு மீன-சந் | | ராகு |
| புத | சூரி சனி | | குரு |

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும், தந்தைவழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் எற்படலாம், திருடர் பயமுண்டு.

**சிம்மம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகராக நிறைவேற்றுவீர்கள், களஸ்திர நன்மையுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் , செய்தொழிலில் மேன்மையுண்டு, உடல் நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலாங்கும், பிள்ளைகளால் பெருமைகள் சேரலாம்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள் , வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம் நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூர தேசத்து செய்திகள் ஆச்சரியம் தரும், தொழிலில் சிறு மாற்றம் செய்யும் நிலை ஏற்படலாம்.



பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான வாரத்தினை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்குழு நடத்தும் பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் ரிசிரி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் ந.உதயனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விரிவுரைகள், வீட்டு வன்முறை தொடர்பான ஆய்வு வெளியீடு மற்றும் ஆவணத்திரைப்படம் ஒன்றும் திரையிடப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:பொ.சோபிகா)

# ஆப்கான் சிவில் சமூகத் தலைவர்கள் யாழ்.மாவட்டத்திற்கு நேற்று விஜயம்



யுத்தத்திற்கு பின்னர் நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்கு ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த சிவில் சமூகத் தலைவர்கள் அடங்கிய குழுவினர் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளனர். 35 பேர் அடங்கிய இந்தக் குழுவினர் கடந்த 28 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்து அநுராதபுரம், கண்டி, கிளிநொச்சி என நாட்டில் உள்ள பல மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தனர்.

யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் நிலைமைகள், சமாதான, நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், மக்களின் கலாசார நிலைமைகள், பெண்களின் சமூக வகிபாகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆராயும் வகையில் அவர்களது விஜயம் அமைந்துள்ளது.

அந்த வகையில் குறித்த குழுவினர் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ப.செந்தில்நந்தனன் ஆகியோரை அரச அதிபரின் அலுவலகத்தில் நேற்று சந்தித்து யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் ஆப்கானிஸ்தான் மக்களின் பிரதிநிதிகளாக இக்குழுவினர் இங்கு வருகை தந்துள்ளதாகவும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள், மக்களின் பங்களிப்புக்கள் மற்றும் எமது அனுபவத்தினையும் கேட்டறிந்ததாக யாழ். மாவட்ட அரச அதிபர் குறித்த சந்திப்பு தொடர்பாக தெரிவித்திருந்தார். (இ-9)

# மென்பொருள் போட்டி இன்று

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் வருடாந்த மென்பொருள் போட்டி (2016) இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.37,சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறைத்தலைவர் கலாநிதி கேதபோதரன், சிறப்பு விருந்தினராக இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி கிளாரி இ.சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# அனுபவப் பகிர்வு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் எமது சமூகத்தில் ஏனையோரின் உரிமைகளுக்காக குரலெழுப்பிக் கொண்டிருக்கின்ற மனிதஉரிமை செயற்பாட்டாளர்களது அனுபவப்பகிர்வுகளை வெளிக்கொணரும் நிகழ்வு நாளை மறுதினம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை இல. 286, யாழ். பிரதான வீதி கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் அறிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்கான சர்வதேச மனித உரிமைகள் தினம் " ஏனையோரின் உரிமைகளுக்காக இன்றே எழுவோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகின்றது. (இ-7)

# புதிய முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா

உரும்பிராய் கிட்ஸ் பார்க் புதிய முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் இல. 44 , முருகன் வீதி உரும்பிராய் கிழக்கு ஞான வைரவர் சுவாமி கோவில் வீதி எனும் இடத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயினால் புதிய முன்பள்ளிக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுவதோடு வாழ்த்துரைகளை வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. ரவீந்திரன் , வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, வட மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய உறுப்பினர் அ. ஈஸ்வரநாதன் பாலா பாலேந்திரா (Former Dy.Mayor of Auburn ,City, Australia ) பரோபகாரி கந்தையா பத்மாசினி அம்மையார் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-7)

# சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் உபதலைவர் ஆ. மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பா. செந்தில்நந்தனன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. திருமதி . பகீரதி ஜீவேஸ்வரராசனன், கௌரவ விருந்தினராக சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர் , முகாமையாளர் பிரதிநிதி திருமதி. வாசுகி இராஜேந்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் 227 ஆவது ஞானச் சுடர் கார்த்திகை மாத மலர் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)



தெல்லிப்பழை, சித்தியம்புளியடி, கலைச்செல்வி முன்பள்ளிக்கு தனது 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் பாண்ட் வாத்தியக்கருவிகள் என்பவற்றை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அண்மையில் வழங்கி வைத்தார்.



யாழ். வலம்புரி புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் விளையாட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் க. தர்மலிங்கம் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் பா. இரகுநாதன் தலைமையுரை நிகழ்த்துவதையும் முன்பள்ளியின் முகாமைத்துவக் குழு உபதலைவரும் சனசமூக நிலைய செயலாளருமான மு. ஜெகதேவன் சிறப்புரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தின் மாநாடு ஜனாதிபதியின் தலைமையில்

இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கத்தின் 72 ஆவது வருடாந்த மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

1944 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கமானது இலங்கை மக்களின் அறிவை மேம்படுத்துவதற்காக செயற்பட்டுவரும் நிறுவனமாகும்.

நாட்டின் அபிவிருத்திக்கு ஏதுவான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவை முன்னிறுத்தி சங்கத்தின் அனைத்து செயற்றிட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

பல்வேறு விடயங்கள் ஊடாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அனைத்து விஞ்ஞானிகளும் ஒரே மேடையில் தமது ஆராய்ச்சிகளையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் முன்வைத்தல்,

அது தொடர்பாக பரந்த கலந்துரையாடலை மேற்கொள்ளும் விஞ்ஞான அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த அமர்வினூடாக ஏற்படுகிறது. "சமூக முன்னேற்றத்துக்காக அனைத்து இடங்களிலுமான ஆராய்ச்சிகள், அபிவிருத்தி மற்றும் பயிற்சி" எனும் தொனிப்பொருளில் இம்முறை அமர்வு நடைபெறுகிறது.

அமர்வு 07 ஆம் திகதியிலிருந்து 09 ஆம் திகதி வரை கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் நடைபெறவுள்ளது. (இ-7-10)


யாரிடம் பேசுவது ?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

*யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.*

தொலைபேசியில் அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்
உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

**(021) 222 8117 / 077 900 8776**
(தினமும் காலை 9.00-1.00)

வவுனியாவில் **(024) 324 4444**
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

*(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*
*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:36 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.COM, HNDA, AAT/அரசதொழில்<br>தொ.இ: B/6569 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 10<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/6582 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 64<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MSc, AAT, ACCA/கணக்காளர்<br>தொ.இ: B/6571 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/6583 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 55 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L/கனடா<br>தொ.இ: B/6573 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி செவ் 2 இல்<br>உயரம்: 148cm<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/6585 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 59செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/6574 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதிசூரிசெவ் 3 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6586 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


Sri Lanka Institute of Advanced Technological Education

ADVANCED TECHNOLOGICAL INSTITUTE
JAFFNA

TECHNOSOFT 2016
Annual Software Competition

Competition On 07.12.2016
@ Advanced Technological Institute
665/2,Beach Road,Jaffna

Awarding Ceremony On 08.12.2016
@ Saraswathy Hall
37,Sir Pon Ramanathan Road, Jaffna

*Organized By- Department of Information Technology ATI-Jaffna*

Media Sponsor
வலம்புரி

Sponsors
PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE
ESOFT The Leader in Professional ICT Education
BCAS CAMPUS
KAJAMUGAN HARDWARE



பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபிலபண்டாரவின் ஏற்பாட்டில் அமனா காப்புறுதி நிறுவன யாழ்.கிளையின் அனுசரணையுடன் சேமிப்பு வாரத்தையொட்டி நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான போட்டிகள் மற்றும் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூநகரி பள்ளிக்குடாவிலுள்ள இளந்தளிர் முன்பள்ளி மைதானத்தில் அமனா காப்புறுதி நிறுவன யாழ்.கிளை முகாமையாளர் ம.கஜமுகன் தலைமையில் நடைபெற்ற போது...

# ஆற்றுமணல் ஏற்றி பயணித்த 2 உழவு இயந்திரங்கள் சிக்கின

## நாளைய தினம் வாகனங்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்படும்; சாரதிகளும் ஆஜர்படுத்தப்படுவார்கள்

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட தர்மபுரம் பொலிஸ் பிரிவிலுள்ள நெத்தலியாற்றுப் பாலத்தில் வைத்து அனுமதிப்பத்திரத்திற்கு முரணாக ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தர்மபுரம் பொலிஸ் நிலைய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரின் திடீர் பரிசோதனையின் போதே அனுமதிப்பத்திரத்திற்கு முரணாக ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்களையும் கைதான சந்தேக நபர்களான சாரதிகள் இருவரையும் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் ஒப்படைத்துள்ள நிலையில் சாரதிகள் இருவரிடம் விசாரணைகள் முடிவுற்றதன் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். நாளை வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்கள் ஒப்படைக்கப் படவுள்ளதுடன் கைதான சந்தேக நபர்களான சாரதிகள் இருவரும் நீதிமன்ற விசாரணைகளுக்காக முற்படுத்தப் படவுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# புது ஐயங்கன்குளத்திற்கான காணி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் நோக்கில் வேலியிடல்

## நேரில் சென்று பார்வையிட்டனர் திணைக்களத் தலைவர்கள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சிமாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மலையாளபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள புது ஐயங்கன் குளத்திற்குரிய காணி வேலி இடப்பட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் கோடைக் காலத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் எனவும் குள நீரேந்து பகுதியை நிறுவனங்கள் மண் போட்டு நிரப்பி கட்டடங்கள் அமைக்கநேரிடும்.

ஆதலால் தரைக்கீழ் நீர் சேகரிப்பு தடைப்பட்டு குளத்திலுள்ள நீர் வேகமாக வற்றிவிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தமது கிராமத்திற்கான குடிநீர், விவசாயத் தேவைகள் என்பன பாதிக்கப்படும் எனகருதி மலையாளபுரம் கமக்கார அமைப்பினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் இணைந்து காணி வழங்கலை இடைநிறுத்துமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவிற்கு வேண்டுகோள் முன்வைத்தனர்.

இதனைஅடுத்து கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினர் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர், கரைச்சி பிரதேச சபை செயலாளர் ஆகியோருடன் நேற்று முன்தினம் குளத்தை நேரில் சென்று பார்வையிட்டதன் அடிப்படையில் கிராம அமைப்பினரின் கோரிக்கையை திணைக்களங்களின் தலைவர்களும் ஏற்றுக்கொண்டதுடன் இதற்கான நடவடிக்கையை எடுத்து காணி வழங்கலை நிறுத்துவதற்கு ஆவன செய்வதாகவும் உறுதியளித்தனர். அத்துடன் வேலியிடப்பட்ட பகுதியில் கடந்த காலங்களில் பெருந்தொகையாக நாட்டப்பட்ட பனம் விதைகள் முளைத்து வடலிகளாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# ஈழத்தமிழர்களின் இதயங்களில் நிறைந்து உரிமைக்குரல் கொடுத்தவர் ஜெயலலிதா

## சிறிதரன் எம்.பி இரங்கல்

தாய்த்தமிழகத்தினுடைய தலைமகளாக இருந்து ஈழத் தமிழர்களின் இதயங்களில் நிறைந்து உரிமைகளுக்காக குரல் கொடுத்த தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மாவின் உயிர் பிரிந்த செய்தி ஈழததமிழர்களுக்கு தணியாத துயரத்தைத் தந்திருக்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

வரலாறு எங்களுக்கு தனித்துவமான பல தலைவர்களைத் தந்திருக்கிறது. அத்தகைய தலைவர்களில் ஒருவரான தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மாவின் ஆத்மா இளைப்பாறிய செய்தியால் கண்ணீர் வடிக்கின்ற ஒட்டுமொத்த தமிழ் குலத்தவரோடு நாமும் கரைந்து போகிறோம். அவர் வரிந்துகொண்ட இலட்சியத்துக்காக கொண்டிருந்த உறுதிப்பாடும் அர்ப்பணிப்புக்களும் வியக்கவும் நயக்கவும் தக்கவையாகும்.

ஈழத்தமிழர்களின் ஆயுத ரீதியாலான விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட போது மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரனின் அடிச்சுவட்டில் செல்வி ஜெயலலிதா காட்டிய ஆதரவு மெச்சத்தக்கது. ஈழத்தமிழர் மீது சிங்கள மேலாதிக்கம் மேற்கொண்ட இனப் படுகொலைக்கு நீதி கோரி சட்ட சபையில் குரல் எழுப்பிய அம்மாவின் துணிச்சலை வரலாறு பதிவு செய்துள்ளது. பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையை அடைய வழி வேண்டும் என்று மொழிந்த அம்மாவின் ஆன்ம விருப்பம் ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பு அரணாக அமைந்தது.

அத்தகைய பெருந்தாயின் பிரிவு தாய்த்தமிழகத்தை மாத்திரம் அன்றி ஈழத்தமிழர்களையும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் குலத்தவரை அதிர்ச்சியிலும் ஆற்றாமையிலும் ஆழ்த்தியுள்ளது.

இலட்சிய தலைவியாக விளங்கி ஈழத்தமிழரின் காப்பரணாக அவர்களின் இதயங்களோடு இணைந்து வாழ்ந்த பெருந் தாய்க்கு ஈழத்தவர்களின் பேரஞ்சலியை சமர்ப்பிக்கிறோம். அவரது பிரிவால் துயர் நிறைந்துள்ள அ.தி.மு.க உடன்பிறப்புக்கள், தமிழக தலைவர்கள், தமிழக உறவுகள், உலகத்தமிழ்ச் சகோதரர்கள் அனைவருடனும் எமது அன்பையும் ஆறுதலையும் பகிர்ந்து கொள்கிறோம்.

"அம்மாவின் ஆத்மா அமைதியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




# கிளி.மாவட்ட நிலைமைகளை ஆராய்ந்த ஆப்கான் சிவில் சமூகத் தலைவர்கள்



ஆப்கானிஸ்தான் நாட்டைச்சேர்ந்த சிவில்சமூக தலைவர்கள குழுவொன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டது. குழுவினரின் விஜயம் நேற்று முன்தினம் நடைபெற்றது.


35 பேர் கொண்ட இந்த குழுவினர் கடந்த 28 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்து அநுராதபுரம், கண்டி, கிளிநொச்சி என நாட்டின் பல மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து வருகின்றனர்.

யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் நிலைமைகள், சமாதான, நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், மக்களின் கலாசார நிலைமைகள், பெண்களின் சமூக வகிபாகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆராயும் வகையில் அவர்களது விஜயம் அமைந்துள்ளது

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட குறித்த குழுவினர் பிற்பகல் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்து மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் ஆகியோர் அடங்கிய மாவட்டச் செயலக குழுவினரை சந்தித்து கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இதன் பின்னர் மேற்படி குழுவினர் கிளிநொச்சி சிவபுரம் கிராமத்திற்கு விஜயம் செய்து அங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலைமைகளையும் நேரில் அறிந்து கொண்டனர். (2-312)

# ஓலைத்தொடுவாய் கிராமத்தில் சட்டவிரோத மண் அகழ்வு



## பொதுமக்கள் இடைமறித்து வாகன சாரதியுடன் வாக்குவாதம்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓலைத்தொடுவாய் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் போலி ஆவணங்களை பயன்படுத்தி மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை குறித்த காணியில் மண் அகழ்ந்து ஏற்றிக் கொண்டு சென்ற டிப்பர் வாகனத்தை கிராம மக்கள் இடை மறித்தமையினால் அக்கிராம மக்களுக்கும் டிப்பர் வாகனத்தின் சாரதிக்கும் இடையில் நீண்ட நேரம் வாக்கு வாதம் இடம்பெற்ற நிலையில் மன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று டிப்பர் வாகனத்தின் சாரதியை அழைத்துச் சென்ற நிலையில் அக்கிராமத்தில் ஏற்பட்டிருந்த பதற்ற நிலை குறைவடைந்துள்ளது.




குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓலைத்தொடுவாய் கிராமத்தில் ஆலயத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அண்மையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில்(டி.சி.சி) மாவட்டத்தினுள் மண் அகழ்விற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தொடர்ச்சியாக மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அக்கிராம மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் ஓலைத்தொடுவாய் பகுதியில் உள்ள குறித்த தனியார் ஒருவரின் காணியில் மண் அகழ்வு செய்து ஏற்றிக்கொண்டு வீதியால் சென்ற டிப்பர் வாகனத்தை மக்கள் இடை மறித்தனர்.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை. உப தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்றனர்.

இதன் போது இரண்டு டிப்பர் வாகனங்களின் சாரதிகளும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடனும் அங்கு சென்ற பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர்களுடனும் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதியை மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.



இதற்கிடையே குறித்த டிப்பர் வண்டியின் உரிமையாளர் சம்பவ இடத்திற்கு வந்து மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை. உப தலைவர் அந்தோனி சகாயம் மற்றும் மக்களை அச்சுறுத்தும் வகையில் கடும் தொனியில் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை குறித்த பகுதியில் போலி ஆவணங்களை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமைக்கு எதிராக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதோடு. அக்கிராம மக்களும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்தனர். (2-9)



சர்வதேச மனிதவுரிமைகள் தினம் நாடளாவிய ரீதியில் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பினால் சர்வதேச மனிதவுரிமை தினத்தையொட்டி "பாரபட்சமற்ற சமுதாயத்தை நோக்கி " எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பேரணியொன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமாகி இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயம் வரை சென்று விழிப்புணர்வு கூட்டமொன்று நடத்தப்பட்டது. (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## கிளிநொச்சி பொலிஸாரினால் சாரதிகளுக்கு போக்குவரத்து விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள்





(பரந்தன்)


கிளிநொச்சி பொலிஸாரால் போக்குவரத்து விழிப்புணர்வை சாரதிகளுக்கு வழங்கும் பொருட்டு பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி- முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் ஆலோசனையின் கீழ் கிளிநொச்சி போக்குவரத்து பதில் பொறுப்பதிகாரி யூட் திசேரவின் தலைமையில் விபத்துக்களை குறைப்பதனை நோக்காக கொண்டு விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸாரால் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் சாரதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடைபவனி ஒன்றும் நடைபெற இருப்பதாக தெரிவிக்கின்றது. (2-312)

## மூன்று இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கிணற்றின் சுவர் வெடிப்பு

**சீர்செய்து மக்களிடம் கையளிக்கப்படும் என்கிறார் கரைச்சிப் பிரதேச செயலாளர்**



கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராமத்தில் புனர்வாழ்வு அமைச்சினால் மூன்று இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கிணறு ஒன்றின் சுவர்கள் வெடித்த நிலையில் காணப்படுகின்றன.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலாளர் நாகேஸ்வரனிடம் வினவிய போது.

இவ்விடயம் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதற்கு அமைய விசாரித்த போது கட்டுமானப் பணிகள் நிறைவுற்ற நிலையில் சுற்றியுள்ள குழிகளுக்கு கனரக வாகனம் மூலம் மண் போடப்பட்டு நிரப்பிய போது வாகனத்தின் முன் பகுதி மோதியதன் காரணமாக கிணற்றில் வெடிப்பு ஏற்பட்டது என்று கூறப்பட்டதாக தெரிவித்தார்.

அது ஒப்பந்தகாரர்களின் தவறு என்பதனால் மீளவும் குறித்த கிணற்றை அமைத்து தருமாறு பணித்திருக்கின்றோம். இன்னமும் ஒப்பந்தப் பணிகள் நிறைவுற்று அவர்களுக்குரிய பணம் விடுவிக்கப்படவில்லை. எனவே கிணற்றை நாம் உரிய முறையில சீர்செய்து மக்களிடம் கையளிப்போம் எனவும் தெரி வித்தார். (2-312)

## கிராம அபி.சங்கம் தெரிவு செய்யப்படாமையால் பிரச்சினைகளை வெளிக்கொணர முடியவில்லை

### செல்வாநகர் மக்கள் ஆதங்கம்

கிளி/செல்வாநகர் கிராமத்தில் 840 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 100 மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் நான்கு வருட காலத்துக்கு மேலாக கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்படாமல் உள்ளமையால் மக்கள் பாரிய இடர்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு வருட காலத்துக்கு முன் இயங்கிய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர். செயலாளர் ஆகியோர் இரண்டரை வருட காலமாக வேறு மாவட்டத்தில் வசிப்பதற்கு சென்றுள்ள நிலையில் வெள்ள அனர்த்தம் காரணமாக செல்வாநகர் மக்கள் பாரிய இடர்களை அடைந்துள்ள நிலையில் உதவித் திட்டங்களுக்காக பல அமைப்புக்களை நாடி தொடர்பு கொண்ட போதும் கிடைக்கப்பெற்ற பதில் உங்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் எங்கே? ஆகும்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒருவருட காலமாக கிராம அபிவிருத்திச் சங்க தெரிவை நடத்துமாறு பொதுமக்கள் கோரியும் அவர் காலம் தாழ்த்துவதால் எமது கிராமத்தின் முன்னேற்றம் பின் தங்கிய நிலையை அடைவதாக மக்கள் கவலையடைகின்றார்கள்.

ஒரு கிராமத்தில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

இந்நிலையில் 840 குடும்பங்கள். 3 ஆயிரத்து 100 பொதுமக்கள். 143முதியவர்கள். 212 பாலூட்டும் தாய்மார்கள். 94 கர்ப்பவதிகள் உள்ள செல்வாநகர் கிராமத்தின் அவல நிலைக்கு எப்போது வழி பிறக்கும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (2-309)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக நீண்ட வரிசையில் காத்திருப்பு





சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கானோர் வரிசையில் காத்து நிற்கின்றனர்.

அரசாங்கம் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துவோருக்கு 25 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக அறவிட எடுத்த தீர்மானத்தையடுத்து ஆயிரக்கணக்கானோர சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழைப் பெறுவதற்கு கொழும்பில் உள்ள நுகேகொட தேசிய மருத்துவ சாரதி நிறுவனத்திலும் பிலியந்தலையில் உள்ள மோட்டார் போக்குவரத்து சாரதி நிலையத்திலும் மருத்துவ பரிசோதனை நிலையத்திலும் நீண்ட வரிசையில் நிற்கினறனர். நாளாந்தம் காலை 7 மணி தொட்டு பிறபகல் 2 மணிவரை 5 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு நாளைக்கு குறைந்தது ஆயிரம் பேருக்கான மருத்துவசான்றிதழ்களை நுகேகொடையில் உள்ள 7 வைத்தியர்கள் பரிசோதனைகளை நடத்துகின்றனர். நாளாந்தம் விடியற்காலையில் 3000 இற்கும் மேற்பட்டோர் நீண்ட வரிசையில் காத்திருக்கினறனர்.

ஆனால் இவர்கள் மருத்துவ சான்றிதழ் பெற்றாலும் பிலியந்தலையில் உள்ள மோட்டார் போக்குவரத்து சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் திணைக்களம். வாகனம் செலுத்தும் பரிசோதனைக்காகவும் எழுத்துப் பரீட்சைக்காகவும் மேலும் 6 மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளதாக நுகேகொடயிலுள்ள போக்குவரத்து அதிகாரி தெரிவித்தார்.

இதே போன்று நாட்டில் உள்ள சகல மாவட்டங்களில் உள்ள போக்குவரத்து சாரதி நிலையங்களிலும் இவ்வாறான நிலை உள்ளது.

இவ்வளவு காலமும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்காது இலட்சக்கணக்கானோர் வாகனம் செலுத்தி வந்துள்ளமை இதில் இருந்து அறிய முடிகின்றது. (இ-7-10)

# இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு நேபாளப் பிரதமருக்கு அழைப்பு



இலங்கைக்கு அடுத்த ஆண்டு விஜயம் செய்யுமாறு நேபாளப் பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு, 60 ஆவது ஆண்டு பூர்த்தியை குறிக்கும் வகையில் நேபாளத்துக்கான இலங்கை தூதுவர் டபிள்யூ சுவர்ணலாத பெரேரா இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

நேபாள பிரதமர் கமல் தஹாலுக்கும் இலங்கை தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் காத்மண்டுவிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நடைபெறறது.

ஐக்கியம், தொன்மையான கலாசாரம் மற்றும் மத ரீதியான உறவுகளை இலங்கையும் நேபாளமும் பேணிவருவதாக பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளுக்கு ஸ்ரீலங்கா வழங்கிய ஒத்துழைப்புக்கு நேபாள பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி. சார்க் மற்றும் தெற்காசிய பிராந்தியங்களின் செழிப்பு உள்ளிட்ட விடயங்களில் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற தமது நாடு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் நேபாள பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



**Botonical Name- Phoenix dactylifera**
**Family- Palmae**
**Eng- Date palm**

# பேரீச்சை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உயரமான மரம். கிட்டத்தட்ட 36 மீற்றர் உயரமுடையது. இதனுடைய தண்டுப் பகுதி அதன் பெரிய இலைகளின் காம்புகளில் நிரந்தரமான அடித்தளங்களால் மூடப்பட்டு காணப்படும். இதன் இலைகள் பாலைவனக் காற்றை தாங்கும் சக்தி வாய்ந்தவை. அதன் இலை ஏறக்குறைய 2.7-5.1 மீற்றர் நீளமிருக்கும். சிற்றிலைகள் நீண்டும், குறுகியும் அழுத்தமாகவும் நீள்வாக்கில் மடிப் புற்றும் இருக்கின்றது ஆண், பெண் தாவரங்கள் இதில் உண்டு.

பூக்கள் சிறியனவாகவும் நீள்வட்ட வடிவ பழங்கள் 2.5- 7.5 செ. மீற்றர் மஞ்சள் கலந்த மண்ணிறம் அல்லது சிவப்பு நிறமாக பழுக்கும் போது இருக்கும் விதைகள் நீள வாக்கில் பள்ளத்தை கொண்ட தடிப்பான உருளை வடிவாக காணப்படும். இது வெப்ப வலயத்திற்குரிய மரமாகும். ஈரான், மலேசியா போன்ற இடங்களில் வளர்க்கப்படுகிறது. இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான் , பஞ்சாப் உத்தரப் பிரதேசம் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வளர்க்கப்படுகிறது. விதைகள் மூலமாகவும் துண்டங்கள் மூலமாகவும் இனவிருத்தி செய்யலாம்.

கிட்டத் தட்ட ஒரு மரத்திலிருந்து 50-250 கிலோ கிராம் பழங்களை பெற்றுக் கொள்ளலாம்.

இதன் பரம்பல் யாழ். மாவட்டத்தில் இல்லை. ஆனாலும் குடத்தனை (வடமராட்சி கிழக்கு), அராலி போன்ற பிரதேசங்களில் ஓரிரு மரங்கள் காய்க்குலைகளுடன் காணப்படுகின்றன.

ஆனாலும் சித்தமருத்துவத்தில் பேரீச்சம் பிஞ்சு , பழம் ஆகியன பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது.

100 கிராம் பேரீச்சம் பழத்திலுள்ள சத்துக்கள் காபோவைதரேற்று 75.8 கிராம், புரதம் 2.5 கிராம், கொழுப்பு - 0.4 கிராம், நார்ப் பொருள் - 3.0 கிராம் , கல்சியம்- 120 மி. கிராம், இரும்புச் சத்து - 7.3 மி. கிராம், பொஸ்பரஸ்-50 மி. கிராம், கரோட்டின் - 26 மி. கிராம், உயிர்ச்சத்து சி -3 மி. கிராம்.

மருத்துவக் குணங்கள்

பேரீச்சம் பிஞ்சு , மல்லி, நிலவேம்பு, வேப்பம்பட்டை இந்த நான்கும் சம அளவிலாக எடுத்து மல்லி 4 பங்கு நீர்விட்டு அடுப்பேற்றி மெல்லிய தீயாக எரித்து 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30-60 மில்லி காலை, சாப்பாட்டின் முன்பு எடுக்க காய்ச்சல் / சுரம் தணியும். பேரீச்சம் பிஞ்சு சிறந்த குருதிக்கலங்களை அதிகரிக்கும் தன்மையுண்டு.

பேரீச்சங்காயை கொட்டை நீக்கி தூய தேனில் ஊற வைத்து 48 நாட்களுக்கு தினமும் அதிகாலையில் சாப்பிட்டு வந்தால் வாயுக் கோளாறுகள் குணமாகும். மாரடைப்பு வராமலும் தடுக்கலாம்.

பேரீச்சம்காயை (50 கிராம்) கொட்டை நீக்கி , அதனுடன் சுக்கு ( வேர்க்கொம்பு ) மாம்பருப்பு ,சிறு நாகம்பூ, சுசகசா - ஒவ்வொன்றும் 25 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 10 கிராம் பொடியை தினமும் 3 வேளையும் சாப்பிட்டு வந்தால் இரத்த மூலம் குணமாகும்.

பேரீச்சம் பழத்தை தினமும் சாப்பிட்டுவந்தால் பித்தம் தணியும் . தலைப்பாரம் , நீர்வேட்கைமலச்சிக்கல் போன்றவையும் குணமாகும்.

விதை நீக்கிய பேரீச்சம் பழத்தை பாலில் வைத்து சாப்பிட (200 மில்லி பசுப் பாலுக்கு 10 கிராம் பேரீச்சம்பழம்) வாய் , மூக்கு ஆகியவற்றின் வழியாக பெருகிவரும் குருதி தடுக்கப்படும். இருமல்,சளி போன்ற நிலைமைகளும் நீங்கும்.

பேரீச்சம் முத்தை தினமும் உண்டு வர பித்தம் தணியும். மலச்சிக்கலும் குணமாகும்.



ஞாபக சக்தியை அதிகரிப்பதற்கு பேரீச்சம் பழத்தை தேனில் ஊறவைத்து 40 நாட்களும், பாலில் வேகவைத்து 40 நாட்களும் பயன்படுத்த வேண்டும்.

பேரீச்சம் பிஞ்சு துவர்ப்பு சுவையுடையது. குடற் புழுக்களை அகற்றும் தன்மை வாய்ந்தது.

பேரீச்சம்பிஞ்சு, வெற்றிலைக் காம்பு, வாய் விளங்கம், மிளகு இவற்றை ஒரே யளவாக எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 ஆக ஊறவைத்து 60 மில்லி லீற்றர் அளவு இரவில் 3 நாட்கள் அருந்த குடற்புழுக்கள் அழியும். ஆனால் தினமும் புதிது புதிதாக குடிநீர் செய்து பயன்படுத்த வேண்டும்.

ஈரானையும் அதனை சுற்றியுள்ள நாடுகளிலும் பேரீச்சம்பழம் உணவாக கருதப்படுகின்றது. உலர்ந்த நல்ல வகை பழங்களையே இவர்கள் உணவாக உட்கொள்வதுண்டு. இது நல்ல போசணையை உண்டாக்குவதுடன் இரத்தத்தை விருத்தி செய்யக் கூடிய பழ உணவாகும்.

நீரிழிவு நோயாளிகளும் தினமும் வாரத்தில் 3-5 நாட்கள் ஒன்று அல்லது இரண்டு பழங்கள் உண்ணலாம். இதில் இருக்கும் Leavalose எனும் சர்க்கரைப் பொருள் சாதாரண குளுக்கோஸைவிட 1/8 பங்கு குறைவாகவே அகத்துறிஞ்சப்படும்.


மேலும் இதிலுள்ள சத்துக்கள் நோயெதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

உடலைப் பலப்படுத்தவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், நரம்புகளை பலப்படுத்தவும் பேரீச்சம் பழங்களை நீளவாக்கில் பிளந்து விதை நீக்கி பாதாம் பருப்பை அதற்குள் வைத்து மாவில் தோய்த்து நெய்யில் பொரித்து தினமும் இரவில் 1,2 பழங்களை 48 நாட்கள் சாப்பிட்டுவர மேற்கூறிய பலனைப் பெறலாம்.

அத்துடன் ஜீரண சக்தியை தூண்டக் கூடியது. இலகுவில் ஜீரணமடையக் கூடியது. குழந்தைகளிலிருந்து வயோதிபர் வரை பேரீச்சம் பழங்களை பயன்படுத்தலாம். சித்த மருத்துவத்தில் இது ஓர் கற்ப மூலிகையாகும்.

மூலச் சூடு , அஜீரணம் உடையவர்கள் பேரீச்சம் பழத்தை மாதுளம் பழச் சாற்றில் ஊற வைத்தும் சாப்பிடலாம்.

# கடன் சுமையைத் தீர்க்க உடன் நடவடிக்கை தேவை



## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

(தொடர்ச்சி)

362.அரசாங்க அபிவிருத்தித்திட்டங்களை துரிதமாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு மிகவும் அனுபவம்மிக்க தொழில்வல்லுநர்களின் சேவை இன்றியமையாததாகும். தற்போது அரசசேவையில் உயர்மட்டத்தில் அவ்வாறான திறமையைக் கொண்டவர்களில் இடைவெளி காணப்படுகின்றது.

ஆகவே, அவ்வாறான தகைமைகளைப் பெற்ற நீதித்துறையினர் மற்றும் கல்வியியலாளர்கள் போன்ற முக்கியமான தொழில்வல்லுநர்களை அவர்களது இளைப்பாறல் வயதுக்குப் பின்னரும் தொடர்ந்தும் தொழிலில் அமர்த்துவதற்கு முடியுமானதொரு முறைமையை நான் முன்மொழிகின்றேன். அவர்களது இளைப்பாறலானது முடக்கப்பட்டு அவர்கள் வேலை செய்யும் காலத்திற்கு தொடர்ந்தும் சம்பளம் வழங்கப்படும். இதற்கான உரிய சட்ட திருத்தங்கள் மிகவிரைவில் இச்சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

363.தேசிய சம்பள ஆணைக்குழுவின் தற்போதைய பதவிக்காலமானது 3 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்படும். அரச சேவையில் காணப்படும் பல்வேறுபட்ட பதவியணிமட்டும்சம்பளப்பிரச்சினைகளைக் கருத்திற் கொள்ளும் போது தொடர்ச்சியை பேணப்பட வேண்டுமென்பதற்காக 2017 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஒரு நிலையான மற்றும் ஒரு நிலையியல் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் சிபார்சு செய்துள்ளார்.

364.நாட்டின் தற்போதைய மொத்த படுகடனானது ரூபா 9 திரிலியன்களுக்கு சற்று அதிகமானதாகும். இதில்43 சதவீதமானது வெளிநாட்டு படுகடன்களாகும். ஆகவே நாட்டின் படுகடன் சுமையை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. ஒரு வெளிப்படையான பொதுகடன்முகாமைத்துவகாலத்தை ஊக்குவிப்பதற்கான எமது அர்ப்பணிப் புக்குக்களின் கீழ் தற்போதுள்ள கடன்களை மீளப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மீள் விநியோகித்தல் ஆகிய தெரிவுகளுடன் கூடிய பொறுப்பு முகாமைத்துவ பொறிமுறையினை அறிமுகம் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். நிதி அமைச் சின் கீழ் சுதந்திரமான கடன் முகாமைத்துவ காரியாலயத்தை அமைப்பதற்கு அமைச்சரவையானது ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இக்காரியாலயமானது அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் வழங்கல்கள் மற்றும் கடன் இருப்பினை முகாமை செய்வதற்கும் நேரடியாக பொறுப்பாய் இருக்கும். இச்செயன்முறைக்கு வசதியளிக்கும் முகமாக உரிய சட்டவாக்கங்கள் அறிமுகம் செய்யப்படும்.

365. சபாநாயகர் அவர்களே, ஜனாதிபதி மற்றும் பிரதமர் அவர்களினால் வழிநடத்தப்படு கின்ற எமது அரசாங்கமானது அனைத்துப் பிரஜைகளினதும் வாழ்க்கை மட்டத்தை மேம்படுத்து வதற்கு அர்ப்பணித்துள்ளது.

முன் னையவர்களால் விட்டுச் செல்லப் பட்ட உயர் கடன் இருப்புகளினால் எமது இறைச் செயற்பாடுகளானது மிகவும் பாதிப்படைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் மீள் செலுத்தப்பட வேண்டிய கடன் சேவைகளின் பெறுமதியானது மூலதன மீள் செலுத்தல் உட்பட ரூபா 1,480 பில்லியன்களாகும். எமது இலக்கு கடன்களுக்கான வட்டிக் கிரயத்தை ரூபா 90 பில்லியன்களாக குறைப் பதாகும். இதற்காக வேண்டி உள்ளூர கடன் வட்டி வீதமானது குறைந்தது 1.5சதவீதத்தினால் குறைக்கப்படல் வேண்டும். கடன் சுமையின் கிரயத்தை குறைப்பதற்கு நாம் புதுமையான பொறிமுறைகளை முன் னெடுத்து அதன் மூலம் கிடைக்கும் சேமிப்புக்களின் நலன்களை மக்களுக்கு வழங்குவோம்.

366.தற்போது பல்வேறு திணைக்களங்கள் மற்றும் நியதிச் சபைகளின் கீழ் பல்வேறு நிதிகள் இயங்கி வருகின்றன. சிறப்பான காசு முகாமைத்துவத்தை உறுதி செய்யும் முகமாக இளைப்பாறல் மற்றும் ஒய்வூதிய நிதிகள் தவிர்ந்த அனைத்து நிதிகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் திரண்ட நிதிக்கு மாற்றப்படல் வேண்டும் என நான் முன்மொழிகின்றேன். திறைசேரியானது தேவைகளுக்கு ஏற்ப கோரப்படும் போது நிதியை விடுவிக்கும்.

367. சபாநாயகர் அவரகளே, போதுமான எண்ணிக்கையிலான விலை மதிப்பீட்டாளர்கள் இன்மையினால் அரசாங்கத்தின் பல பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் தாமதம் அடைந்துள்ளன. இக்குறைபாடுகளினால், உள்ளூராட்சி மன்றங்களினால் காணிகள் மற்றும் சொத்துக்களை உரிய முறையில் மதிப்பீடு செய்ய முடியாதுள்ளதுடன் வருமானத்தையும் இழந்து கொணடிருப்பதனைக் காணலாம். ஆகவே 2017 ஆம் ஆண்டில் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு புதிதாக 400 விலை மதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்கும் மற்றும் புதியதொரு பதவி உயர்வு முறையொன்றை அறிமுகம் செய்து திணைக்களத்தை உறுதிப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

368.அரசாங்கத்தின் சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்தை கண்காணிப்பதற்காக நிதிஅமைச்சில் கட்டுப்பாட்டாளர் நாயகம் காரியாலயத்தை உருவாக்குவதற்கும் நான் முன்மொழிகினறேன். அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு ஆதன பதிவு உருவாக்கப்படும்.

369.பொது நிதி முகாமைத்துவமானது தொடர்ந்தும் மிகவும் சிக்கலடைந்து வரும் சூழ்நிலையில் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் பொது நிதி தொடர்பாக பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் பொது சேவைத் துறையின் இயலளவை கட்டியெழுப்புவதற்கான தேவை காணப்படுகின்றது. இது தொடர்பில் திறைசேரி மற்றும் நிதித்துறை கற்கைகள் தொடர்பான "மிலோதா"கல்வி நிறுவனத்திற்கும் இடையில் மிகவும் நெருங்கிய இணைப்பினை ஏற்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

370.சபாநாயகர் அவர் களே, தற்போது அரச சேவையில் 1.4 மில்லியன் அரச ஊழியர்கள் காணப்படுகின்றனர். அதாவது, நாட்டின் ஒவ்வொரு 15 பிரஜைக்கும ஒரு அரச ஊழியர் என்ற விகிதா சாரத்தில் காணப்படுகின்றனர். அரச துறையில் பெருமளவில் ஊழியர்கள் காணப்பட்டாலும் பாடசாலைகள், வைத்திய சாலைகள் மற்றும் தூரபிரதேசங்களில் காணப்படும் அரச திணைக்களங்களில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆகவே சேவை வழங்கலை உச்சப்படுத்தும் வகையில திறைசேரியானது ஒரு ஆளணி மீளாய்வினை மேற்கொள்வதற்கு முன்மொழிகின்றேன்.

371.அரச சேவைத்துறையில் 94 சதவீதமானோர் நிறைவேற்று தரமல்லாத ஊழியர்களாகும். ஒரு முறைமையான இயலளவை கட்டியெழுப்புவதற்கான பொறிமுறையொன்று காணப்படாததன் குறைபாடு காரணமாக நிறைவேற்று தரமல்லா ஊழியர்கள் உரிய பயிற்சியினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஆகவே, சகல நிறைவேற்றுத் தரமல்லா அரச ஊழியர்களும் ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒரு முறையும் பயிற்சியை பெற்றுக்கொள்ளக்கூடிய வகை யில் ஒரு பயிற்சி நெறித்திட்டத்தை அறிமுகம் செய்யும்படி நான் பொது நிர்வாக அமைச்சினை வேண்டிக் கொள்கின்றேன்.

372.அரசதுறை சொத்துக்களான காணிகள், கட்டடங்கள், கேட்போர் கூடங்கள் மற்றும் சிற்றுண்டிச சாலைகள் முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை அவதானிக்க முடியுமாயுள்ளது. மிகவும் சிறப்பான பயன்பாட்டிற்காக அவற்றை பொது மக்கள் மற்றும் தனியார் துறையினரின் பயன்பாட்டிற்கு வாடகைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழிகின்றேன். அரசதுறையில் காணப்படும் பயன்படுத்தப்படாத மற்றும் குறைபாடுகளுடைய வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

373.அனைத்து அரச துறை நிறுவனங்களிலும் ஊழியர்களின் வரவினை பதிவு செய்வதற்காக விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும் என முன்மொழிகின்றேன்.

374. சபாநாயகர் அவரகளே, முப்படைகளும் தற்போது உல்லாச ஹோட்டல்களை இயக்குதல் மற்றும நிர்மாணக் கைத்தொழில் போன்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றினால் மேற்கொள்கின்ற அனைத்து வியாபார நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து கம்பனியொன்றினை உருவாக்கு வதற்கும் இச்செயற்பாடுகளை படகு நிர்மாணம் மற்றும் விமானங்கள் பராமரிப்புத் துறைகளுக்கு விஸ்தரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

375. சபாநாயகர் அவரகளே, கிராமிய மட்டத்தில் பொது சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக பிரஜைகள் பல இடங்களுக்கும் அலைக்கழிக்கப்படுகின்றனர். ஆகவே கிராமசேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மருத்துவ தாதி மற்றும் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர்களை ஒரே கூரையின் கீழ் பணியாற்றக்கூடிய வகையில் 1,000 சேவை மத்திய நிலையங்களை உருவாக்குவதற்கும் முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 1,500 மில்லியன்களை ஒதுக்கிடுவதற்காக முன்மொழிகின்றேன்.

376.பல்வேறுபட்ட தரப்பினர்களுடனும் நான் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போதும் உதாரணமாக,மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பொதுச்சேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பெரும்பாலானோர் உரிய நடைமுறைகளை அறியாதவர்களாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே, அனைத்து பிரஜைகளினதும் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் அனைத்து அரச நிறுவனங்களிலும் தமது சேவை வழங்கலின் போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளை மும்மொழிகளிலும் இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் என நான் முன்மொழிகின்றேன்.

377.தற்போது நடைமுறையிலுள்ள பெறுவனவுக் நடைமுறையானது. நவீன பெறுவனவு முறைமைகளான "சுவிஸ்செலஞ்", இலத்திரனியல் மற்றும் பசுமை பெறுவனவு முறைமைகளும் உள்ளடக்கக்கூடிய வகையில் மேம்படுத்தப்படல் வேண்டும் என்பதை நான் காண்கின்றேன். ஆகவே, 2017 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் நவீன கொள்வனவு நடைமுறையை வெளியிடுமாறு சுயாதீன கொள்வனவு ஆணைக்குழுவினை வேண்டிக்கொள்கின்றேன்.

378.இப்புதிய நடைமுறைகளின் காரணமாக தற்போது ஒரு கொள்வனவை மேற்கொள்வதற்கு சராசரியாக எடுக்கும் காலத்தை 54 கிழமைகளிலிருந்து 17 கிழமைகளாக குறைக்கலாம் என எதிர்பார்க்கின் றேன். இது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்.


379.அபிவிருத்தி கருத்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினை விட குறிப்பிடும் படியான அளவில் மிகையான செலவு இடம் பெறுவதைத் தொடர்ந்தும் காணக்கூடியதாகவுள்ளது. ஆக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினை விட 10 சதவீதத்திற்கு மேல் கிரய அதிகரிப்பு காணப்படுமாயின் அவற்றை மீளாய்வு செய்வதற்காக திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரிகள் தலைமையின் கீழ் ஒரு குழுவை அமைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

380.நாங்கள் மத்திய கொள்வனவு முகவராண்மையை உருவாக்குவோம். இதன் ஊடாக எழுது கருவிகள், காரியாலய உபகரணங்கள் போன்றவற்றை மையப்படுத்திய முறையில் கொள்வனவு செய்வோம். இப்பொறிமுறையின் மூமை ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கு குறைந்தபட்சம் ரூபா 4,000 மில்லியன் சேமிக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.


381.கொள்வனவுகளின் போது உள்ளூர் கம்பனிகளுக்கு 35 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதி சேர்ப்புக்கு மற்றும் 5சதவீத விலை நயத்தினையும் பெற்றுக் கொடுக்கப்படும்.

(தொடரும்)

# தமிழக முதலமைச்சர் ஜெயல













தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் அஞ்சலி

## 7 நாள் அரசு முறை துக்கம்

முதல்வர் ஜெயலலிதா மறைவையொட்டி 6 ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு அரசு முறை துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று ராஜ்பவன் செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளுநர் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது. முதல்வர் ஜெயலலிதா 5 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 11.30 மணிக்கு காலமானார் என்பதை தமிழக அரசு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

இதையொட்டி 6 ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு அரசு முறை துக்கம் கடைபிடிக்கப்படும். இந்த நாட்களில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தேசியக் கொடி அரை கம்பத்தில் பறக்க விடப்படும். இந்த 7 நாட்களும் அரசு நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாது. இவ்வாறு தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் சார்பில் தலைமை செயலாளர் ராம்மோகன்ராவ் தெரிவித்துள்ளார். (இ-7)



மத்திய அமைச்சர் வெங்கய்யா நாயுடு அஞ்சலி...!

## ராஜாஜி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்கா வைக்கப்பட்டது ஜெயலலிதாவின் உடலம்



உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் நள்ளிரவு காலமான தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உடல் போயஸ் கார்டனில் அவர் வாழ்ந்த வேதா இல்லத்தில் இருந்து . மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக ஓமந்தூரார் தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்துக்கு எடுத்து செல்லப்பட்டது.முன்னதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா உடல்நலக் குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் காலமானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் ஜெயலலிதா (வயது-68) உடல்நலக் குறைவு காரணமாக அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி காலமானார்.

இதயம் செயலிழந்ததால் ஜெயலலிதா மரணமடைந்ததாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தது. இதனால் மருத்துவமனை முன் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கதறி அழுதனர்.

பின்னர் அப்பல்லோ மருத்துவமனையில் இருந்து, போயஸ் தோட்டத்தில் உள்ள அவரது வேதா இல்லத்திற்கு ஜெயலலிதாவின் உடல் கொண்டு வரப்பட்டது.

அவரது உடல் கொண்டு வரப்பட்ட வாகனத்தை கண்டதும் போயஸ் தோட்டம் இல்லம் [illegible]கே கூடி[illegible]ருந்த அ.தி.மு.க. தொண்டர்க[illegible] கண்ணீர் விட்டு கதறி அழுதன[illegible]

போயஸ் கார்டன் கொண[illegible] வரப்பட்ட ஜெயலலிதாவின் உட[illegible]க்கு குடும்ப சம்பிரதாயப்படி சட[illegible]கள் நடத்தப்பட்டன.

பின்னர் மக்கள் அஞ்சலி செலு[illegible]வதற்காக சென்னை ஓமந்தூரா[illegible] தோட்டத்தில்உள்ள ராஜாஜி மண்டபத்[illegible]க்கு ஜெயலலிதாவின் உடல் கொண[illegible] செல்லப்பட்டது. ஜெயலலிதாவி[illegible] உடலுக்கு அங்கு கூடியிருந்த பல்[illegible]யிரக்கணக்கான தொண்டர்களு[illegible] மக்களும் கண்ணீர் அஞ்ச[illegible] செலுத்தினர். (இ-

## அம்மா...! உங்களை இப்படியா பார்க்கணும்



இளையராஜா அஞ்சலி



ஓ.பன்னீர்செல்வம் கண்ணீர் மல்க அஞ்சலி



நடிகர் ரஜினி அஞ்சலி

(சென்னை)

தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார், தொடர் சிகிச்சைகள் அளித்து வந்த நிலையிலும் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி அப்பல்லோ மருத்துவமனையில் உயிரிழந்தார்.

கடந்த 75 நாட்களாக ஜெயலலிதாவின் புகைப்படத்தை கூட வெளியிடாத நிலையில், ராஜாஜி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ஜெயலலிதாவை பார்த்தவுடனேயே. ஐயோ... அம்மா உங்களை இப்படியா பார்க்கணும் என மக்கள் கதறித்துடித்தன[illegible]

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திருநாவ[illegible]கரசர் அஞ்சலி செலுத்தினார்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு ந[illegible]கர் பிரபு, நடிகர் விக்ரம் பிரபு மற்றும் அ[illegible]ரது குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தின[illegible] இவர்களை பார்த்தவுடன் சசிகலா கத[illegible] அழுதார்.

ஜெயலலிதாவுக்கு மத்திய அமைச்சர் பொ[illegible] ராதாகிருஷ்ணன், இல.கணேசன், முர[illegible]தரராவ் அஞ்சலி செலுத்தினர். (இ-




நடிகர் விஜய், தாமு அஞ்சலி



புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி அஞ்சலி

## இருந்தும் கொடுத்தார் இறந்தும் கொடுத்தா



முதல்வர் இறப்பு செய்தியால் தமிழகமே சோ[illegible]த்தில் உள்ளது. பேருந்து நிலையங்களில் எந்த உ[illegible]வகமும் இல்லாமல் மக்கள் சிரமப்பட்டு கொண்டிருக்[illegible]றார்கள்.

ஆனால் அரியலூரில் அம்மா உணவகத்[illegible] திறந்து உணவளிக்கிறார்கள். "இருந்தும் கொ[illegible]த்தார். இறந்தும் கொடுத்தார் அம்மா" என்று மக்க[illegible] கண்ணீர் விட்டு அழுகின்றனர். (இ-

# லலிதாவிற்கு இறுதி அஞ்சலி!



பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி

## அம்மா இல்லாத தமிழகத்தில் எம்மால் இனி வாழமுடியாது

### அ.தி.மு.க.தொண்டர்கள் கண்ணீர்விட்டு கதறல்



(சென்னை)

அம்மா இல்லாத தமிழகத்தில் இனி எம்மால் வாழ முடியாது என அ.தி.மு.க. தொண்டர்கள் கண்ணீர் விட்டுக் கதறியழுதபடி கூறினர்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயராமன் ஜெயலலிதா நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் காலமானார்.

அவரது மறைவுச் செய்தியறிந்து தமிழக மக்கள் மிகவும் மனவேதனையில் உள்ளனர்.

கட்சி வேறுபாடுகள் இன்றி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அ.தி.மு.க. தொண்டர்கள் ஆண், பெண் வேறுபாடின்றி வயோதிபர்கள் உட்பட பலர் கண்ணீர் விட்டு கதறியழுது தமது சோகத்தை வெளிப்படுத்தினர்.

தமிழகத்தில் அம்மாவின் முகத்தை நேரில் இனிமேல் பார்க்க முடியாது.

அம்மா இல்லாத தமிழகத்தில் இனி எங்களால் வாழவே முடியாது. எங்களுக்கு அம்மாதான் வேண்டும் எனக் கதறியழுதனர்.(இ)



## தடைகளை தகர்த்தெறிந்த சரித்திர தலைவி இந்த ஐந்து வெற்றிகளே அதற்கு உதாரணம்

தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது வாழ்க்கையை தொடங்கியது ஒரு நடிகையாக என்றாலும் பல உச்சங்களை தொட்டது அரசியல் பயணத்தில்தான்.

உடல்நலக்குறைவால் சென்னை அப்பல்லோவில் சிகிச்சை பெற்று வந்த முதல்வர் ஜெயலலிதா சிகிச்சை பலனில்லாமல் மரணமடைந்தார். இவரது இழப்பு தமிழக மக்களுக்கு பெரும் அதிர்ச்சியாக அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாது இவரது மறைவு இந்திய அரசியல் வரலாற்றிலும் மிகப்பெரிய வெற்றிடத்தை உருவாக்கி உள்ளது.

அரசியல் பயணத்தில் இவர் பலவற்றை சாதித்திருந்தாலும், இந்த 5 வெற்றிகள் மூலம் இவர் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையும் அறியலாம்.

ஜெயலலிதாவின் மிகப் பெரிய அரசியல் வெற்றி என்றால் அது 1989ஆம் ஆண்டுதான். ஜெயலலிதாவின் அரசியல் வழிகாட்டியான எம்.ஜி.ஆர்.மறைவுக்கு பின் கட்சியானது இரு பிரிவுகளாக உடைந்தது. அப்போது 27 இடங்களை வெற்றி பெற்ற ஜெயலலிதா முதல் பெண் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரானார்.

இரண்டாவது மிகப்பெரிய வெற்றியானது 1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தியின் படுகொலைக்கு பிறகு காங்கிரஸ்டனான கூட்டணியில் ஜெயலலிதா தமிழ்நாட்டின் முதல்வராக தெரிவு செய்யப்பட்டார். தமிழ்நாட்டின் 2 ஆவது பெண் முதல்வர், குறைந்த வயது முதல்வர் என்ற பல வரலாறு படைத்தார்.

2001 இல் ஜெயலலிதா பல்வேறு சர்ச்சைகளில் சிக்கினார். இரு முக்கிய வழக்குகளிலும் சிக்க வைக்கப்பட்டார். ஆனால் மக்கள் அவர் மீது கொண்ட நம்பிக்கையால் 234 தொகுதிகளில் 196 இடங்களில் அபார வெற்றி பெற்றார்.

2011 ஆம் ஆண்டு தேர்தலில் ஜெயலலிதாவின் மீதான வழக்குகளால் தனக்குதான் வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கையில் இருந்தது தி.மு.க. ஆனால்அந்த நம்பிக்கையை தவிடுபொடியாக்கி ஆட்சியை பிடித்தார் ஜெயலலிதா.

இதன் பின்னர் 2016 ஆம் ஆண்டும் இதே நிலைமைதான் ஏற்பட்டது. மக்களின் அனுதாபங்களை பெற்ற ஜெயலலிதா தொடர்ச்சியாக 2 ஆவது முறையாக முதல்வராகி சாதனை படைத்தார். இவரின் இந்த வெற்றி எதிர்க்கட்சியான தி.மு.கவை அதிர்ச்சிக்குள்ளாகியது.

இந்நிலையில் 4 முறை முதல்வராக இருந்த சிறந்த பெண் தலைவர் என்ற சாதனையோடு விடைபெற்றுவிட்டார் ஜெயலலிதா. (இ-7)

# இந்திய அரசியலில் ஒரு பெரும் வெற்றிடம் உருவாகியிருக்கிறது

## பிரதமர் மோடி இரங்கல்



அப்பலோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா சிகிச்சை பலனின்றி காலமானார்.

அவருக்கு வயது 68. டிசெம்பர் 5 ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு வைத்தியர்களின் தீவிர சிகிச்சை பலனின்றி ஜெயலலிதா காலமானதாக அப்பலோ மருத்துவமனை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்திய பிரதமர் மோடி, தனது இரங்கலை டுவிட்டர் தளத்தில் தெரிவித்து இருக்கிறார். "செல்வி ஜெயலலிதாவின் மறைவு வருத்தம் அளிக்கிறது. இந்திய அரசியலில் ஒரு பெரும் வெற்றிடத்தை உருவாக்கிவிட்டார் ஜெயலலிதா. மக்களுக்காகவே யோசிப்பது, பெண்களுக்காக போராடுவது, ஏழைகளின் நலனுக்காகவே சிந்தித்தது போன்றவை எனக்கு மிகவும் ஊக்கம அளித்தது. இந்த துயரமான சம்பவத்தில், எனது எண்ணங்களும் ஆறுதல்களும் தமிழக மக்களுடன் இருக்கும்.

இந்த பெரும் துயரில் இருந்து அனைவரும் மீள எலலாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன். அவரை பல சமயங்களில் சந்தித்த தருணங்களை நினைவுகூர்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என டுவிட் செய்து இருக்கிறார். (இ-7)

**Narendra Modi** @narendramodi Follow

I will always cherish the innumerable occasions when I had the opportunity to interact with Jayalalithaa ji. May her soul rest in peace.

12:33 AM - 6 Dec 2016

4,573 8,102

# தமிழக முதல்வர் ஜெயாவிற்கு ஜனாதிபதி மைத்திரி இரங்கல்



தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் மரணம் குறித்து இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

தமிழக மக்கள் மற்றும் ஜெயலலிதாவின் அன்புக்குரியவர்களுக்கு தனது இரங்கலை தெரிவிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த செய்தியை தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவேற்றம் செய்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மாரடைப்பினால் மரணமடைந்துள்ளார் என அப்பலோ மருத்துவமனை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

கடந்த செப்டெம்பர் 22ஆம் திகதி நீர்ச்சத்துக் குறைபாடு காரணமாக அப்லோ மருத்துவமனையில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**Maithripala Sirisena** @MaithripalaS 16m

Chief Minister Jayalalitha was a leader dearly loved by her people. I express my condolences to her loved ones and the people of Tamilnadu.

3 8 ...

# வீரப்புதல்வியை இழந்து விட்டோம்

## நடிகர் ரஜினிகாந்த் இரங்கல்



தமிழக முதல்வர் ஜெயலலிதா காலமானார். இதையடுத்து அவரது மறைவுக்கு பலரும் தொடர்ந்து இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஜெயலலிதா மறைவுக்கு நடிகர் ரஜினிகாந்த் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரஜினி காந்த் தனது டுவிட்டர் பக்கத்தில்,

'தமிழ்நாடு மட்டுமல்ல. இந்திய நாடே தன்னுடைய வீரப்புதல்வியை இழந்து தவிக்கிறது. மரியாதைக்குரிய நம் முதல்வரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்" எனக் கூறியுள்ளார். (இ-7)

தமிழ்நாடு மட்டுமல்ல ...இந்திய நாடே தன்னுடைய வீரப்புதல்வியை இழந்து தவிக்கிறது ---- மரியாதைக்குரிய நம் முதல்வரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்...

**Rajinikanth** @superstarrajini Follow

1:42 AM - 6 Dec 2016

2,947 4,468

# ஜெயலலிதாவின் பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்படும்- ஜனாதிபதி இரங்கல்




தமிழக அரசியல் முன்னேற்றத்திற்காக மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா ஆற்றிய பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்படும் என ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளர்.

இந்தியாவின், ஆளுமையும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட அரசியல் தலைவர்களுள் ஒருவராக திகழ்ந்த ஜெயலலிதா, தமிழக மக்களுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என, முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவையடுத்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழகத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக ஜெயலலிதா அளப்பெரும் பங்காற்றியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, பல கோடி மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு தலைவரை நாடு இழந்து தவிக்கின்றதென்றும், அவரது மறைவுக்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுளளார். (இ-7)

# ஜெயலலிதாவின் மறைவுக்கு அமெரிக்க தூதர் இரங்கல்



தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் ரிச்சர்ட் வர்மா இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர், மாநில முதலமைச்சர்கள், மாநில ஆளுநர்கள், தேசிய - மாநில கட்சித் தலைவர்கள், திரையுலகபிரமுகர்கள் ஆகியோர் தொடர்ந்து இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் ரிச்சர்ட் வர்மா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'அமெரிக்கா-இந்தியா இடையிலான நெருங்கிய உறவுகளை ஆதரித்ததுடன் தமிழ்நாட்டுக்காக பல ஆண்டுகள் பொதுச்சேவை செய்தவர் என்ற முறையில் ஜெயலலிதா நினைவுகூரப்படுவார்.

இந்த துயரமான நேரத்தில் எங்களது எண்ணங்களும் பிரார்த்தனையும் தமிழ்நாட்டு மக்களுடன் இணைந்திருக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# விடாமுயற்சியுடன் பல திட்டங்களை நிறைவேற்றியவர் முதல்வர் ஜெயா

## மு.க.ஸ்டாலின் இரங்கல்



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, படிப்படியாக உயர்ந்த தலைவர் என்பதுடன் விடாமுயற்சியுடன் பல திட்டங்களை நிறைவேற்றியவர் என எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராஜாஜி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் பூதவுடலுக்கு நேற்று நேரில் சென்று அஞ்சலி செலுத்திய மு.க. ஸ்டாலின் அதனைத் தொடர்ந்து தனது இரங்கலையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது, ஜெயலலிதாவின் மறைவு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அனைவருக்கும் வழங்கியுள்ளது. அவருக்கு தி.மு.க. சார்பிலும் தி.மு.க. தலைவர் கருணாநிதி சார்பிலும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறேன்.

அவர் எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றிய போது நான் துணை முதலமைச்சராக பணியாற்றியிருக்கிறேன். அதேபோன்று அவர் முதலமைச்சராக பணியாற்றிக் கொண்டிருக்கும் போது நான் எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றியிருக்கிறேன். அது பெருமைக்குரியதாகவே நினைக்கின்றேன். எத்தகைய பிரச்சினையாக இருந்தாலும் விடாப்பிடியாக இருந்து தீர்க்கும் வல்லமை அவருக்கு உண்டு.

அவருடைய இழப்பினால் வாடிக்கொண்டிருக்கும் அ.தி.மு.க. தொண்டர்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்கள் அனைவருக்கும் தி.மு.க. சார்பிலும் தி.மு.க. தலைவர் கருணாநிதி சார்பிலும் மீண்டும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜெயலலிதாவின் திரையுலக வாழ்க்கை

















தமிழ்த்திரை உலகில் புகழ்பெற்ற நட்சத்திரமாக திகழ்ந்த சந்தியா-ஜெயராம் தம்பதியரின் இரண்டாவது குழந்தையாக 1948 பெபரவரி 24 ஆம் திகதி மகம நட்சத்திரத்தில் ஜெயலலிதா பிறந்தார். ஜெயலலிதா பிறந்தது மைசூர் நகரில் என்றாலும் அவருடைய முன்னோர்கள் திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்தவர்கள்.

ஜெயலலிதாவின் தந்தை ஜெயராமின் தகப்பனார் பெயர் ரங்காச்சாரி. இவர் மைசூர் மகாராஜாவின் குடும்ப வைத்தியர். ஜெயலலிதாவுக்கு 1 1/2 வயது ஆன போது, தந்தை காலமானார். முதலில் பெங்களூர் பிஷப் கார்டன் பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் படித்த ஜெயலலிதா, பின்னர் சென்னையில் சர்ச் பார்க் கான்வென்டில் படிப்பை தொடர்ந்தார். படிப்பில் முதல் மாணவியாக திகழ்ந்தார். படிக்கும் போதே முறைப்படி பரத நாட்டியம் பயின்றார். 12ஆவது வயதில் அவருடைய நடன அரங்கேற்றம் நடந்தது. பிரபல வித்துவான்களிடம் முறைப்படி கர்நாடக சங்கீதத்தை கற்றுக் கொண்ட ஜெயலலிதா, இசைக் கருவிகளை மீட்டவும் இனிமையாக பாடவும் தேர்ச்சி பெற்றார்.

1964 ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேறிய ஜெயலலிதா தாய் மொழி தமிழைப் போல் ஆங்கிலம், கன்னடம், இந்தி, தெலுங்கு, மலையாளம் முதலான பிற மொழிகளையும் சரளமாக பேச கற்றுக்கொண்டார்.

மேல் படிப்புக்கு ஜெயலலிதா முயற்சி செய்யும்போது, அவருடைய வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்பட்டு திரை உலக பிரவேசம் நடந்தது. ஜெயலலிதாவின் சித்தி (தாய் சந்தியாவின் தங்கை) வித்யாவதி ஏற்கனவே சினிமாவில் நடித்து வந்தார் அடுத்து சந்தியாவும் சினிமா நட்சத்திரமானார்.

ஜெயலலிதாவுக்கு சினிமாவில் விருப்பமில்லை என்றாலும், குடும்ப நிலை காரணமாக திரை உலகில் புகுந்தார்.

தொடக்கத்தில் சில கன்னடப்படங்களில் நடித்தாலும் அவர் கதாநாயகியாக நடித்து 1965 இல் வெளிவந்த டைரக்டர் ஸ்ரீதரின் "வெண்ணிற ஆடை" தான் அவரது முதல் தமிழ்ப்படம்.

வெண்ணிற ஆடை படம வெளிவருவதற்கு முன் ஜனாதிபதி வி.வி.கிரியின் மகன் சங்கர் கிரி தயாரித்த "எபிசில்" (லிகிதம்) என்ற ஆங்கிலப்படத்தில் ஜெயலலிதா நடித்தார். அந்த படத்தை பார்த்தவர்கள் இதில் ஜெயலலிதா பேசுவதுதான் இங்கிலீஷ்! மற்றவர்கள் பேசுவது பட்லர் இங்கிலீஷ் என்று வேடிக்கையாக குறிப்பிட்டார்கள்.

முதல் படத்திலேயே கதாநாயகி ஆகி புகழின் உச்சிக்குச் சென்ற ஜெயலலிதா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என்று பல மொழிகளிலும் நடித்தார். சிவாஜிகணேசன், என்.டி.ராமராவ், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் என்று முன்னணி கதாநாயகர்கள் எல்லோருடனும் நடித்தார். ஜெயலலிதாவின் தாயார் சந்தியா 1971 ஆம் ஆண்டு காலமானார். தாயாரின் நினைவாக தேனாம்பேட்டை போயஸ் தோட்டத்தில் வீடு ஒன்றைக் கட்டிய ஜெயலலிதா அந்த வீட்டிற்கு "வேதா நிலையம்" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். (சந்தியாவின் இயற்பெயர் "வேதா")

ஜெயலலிதாவின் 100 ஆவது படமான "திருமாங்கல்யம்" 1977 இல் வெளிவந்தது. அதன்பின் படங்களில் நடிப்பதை படிப்படியாக குறைத்து கொண்டார். 1980 இல் வெளிவந்த, "நதியைத்தேடி வந்த கடல்" என்ற சினிமாதான் அவர் நடித்து கடைசியாக வெளிவந்த படம். சுமார் 16 ஆண்டுகளில் 112 படங்களில் நடித்து முடித்தார் ஜெயலலிதா. (இ-7)



ஆங்கிலம் மற்றும் சரித்திர பாடம் இரண்டிலும் ஜெயலலிதா புலி. அவை இரண்டு மட்டுமல்லாமல், மற்ற எல்லாப் பாடங்களிலும் அவர் நன்றாகப் படிக்கக்கூடிய மாணவியாகத் திகழ்ந்தார்.















ஜெயலலிதாவின் தாயார் சந்தியா, சிவாஜியுடன் படத்தில் நடிக்கும் போது சிறுமியாக இருந்த அவர் படப்பிடிப்புக்குச் செல்வார். அதன் பிறகு சிவாஜியுடனேயே சேர்ந்து நடிக்கும் வாய்ப்புகள் அவருக்கு அமைந்தது.







நடனம் கற்றுக் கொடுக்க ஆசிரியர் வரும் போதெல்லாம் உடம்பு சரியில்லை என்று கூறி, ஆசிரியரை அனுப்பி விடுவாராம். ஏமாற்றுகிறார் என்று தெரிந்த பின்னர் அவர் தாயார் கட்டாயப்படுத்தி நடனம் கற்க வைத்தாராம்.







# ஜெயலலிதா கடந்து வந்த முட்கள் நிறைந்த பாதை




முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல்நிலைமை குறித்து சென்னை அப்பலோ வைத்தியசாலை நேற்று முன்தினம் பிற்பகல் வெளியிட்ட அறிக்கை உண்மையிலேயே அதிர்ச்சி தந்தது.

ஜெயலலிதா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 78 நாட்கள் கடந்து விட்ட போதிலும், இவ்வாறானதொரு அறிக்கையை அப்பலோ வைத்தியசாலை இதுவரை வெளியிட்டது கிடையாது.

முதலமைச்சர் உடல்நிலை தேறி வருவதாகவே அவ்வப்போது அப்பலோ அறிக்கையை வெளியிட்டு வந்தது.

சில தினங்களுக்கு முன்னர் அப்பலோ வெளியிட்ட அறிக்கையில், ஜெயலலிதா உடல்நிலை தேறி விட்டதாகவும் எவ்வேளையிலும் அவர் வீடு திரும்பலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

லண்டன் வைத்தியர்கள், டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலை நிபுணர்கள் வழங்கிய சிகிச்சை காரணமாக ஜெயலலிதாவின் உடல்நிலை நன்கு தேறி விட்டதாகவே அப்பலோவிலிருந்து முன்னர் அறிக்கைகள் வந்து கொண்டிருந்தன.

அ.தி.மு.க. தொண்டர்களும் ஜெயலலிதா மரணப்பிடியிலிருந்து மீண்டு விட்டதாகவே மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தனர். ஆனால் நேற்று முன்தினம் அப்பலோ வெளியிட்ட அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதாவின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அப்பலோ நேற்று முன்தினம் அறிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திடீர் மாரடைப்பொன்று ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டதாகவும், அதன் காரணமாக நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் சிறிய இருதய சத்திரசிகிச்சையொன்று (ஆஞ்சியோ) அவருக்கு மேற்கொள்ளப்பட்டதாகவும் அப்பலோ அறிக்கை கூறியது.

இச்சத்திரசிகிச்சையின் பின்னர் ஜெயலலிதா மீண்டும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவே வைத்தியசாலை வட்டாரங்கள் மாத்திரமன்றி அ.தி.மு.க. முக்கியஸ்தர்களும் தெரிவித்தனர்.

காய்ச்சல் மற்றும் நீர்ச்சத்து குறைவு காரணமாக கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜெயலலிதா, 78 தினங்களாக அங்கு சிகிச்சை பெற்று வந்தார்.

ஜெயலலிதாவின் உடல்நிலை பற்றிய அறிக்கையானது அவரது அபிமானிகளை பெரும் அதிர்ச்சியிலும கவலையிலும் ஆழ்த்தியிருந்தது. "கேமோ" கருவி மூலம் அவர் சிகிச்சை பெற்று வருவதாக அறிக்கை கூறியது.

இதேவேளை டில்லியிலிருந்தும லண்டனிலிருந்தும விசேட வைத்திய நிபுணர்களை வரவழைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜெயலலிதாவின் உடல்நிலையை அறிந்ததும் அ.தி.மு.க. தொண்டர்களும் அபிமானிகளும் அப்பலோ வைத்தியசாலைக்கு திரண்டு வந்தபடியிருந்தனர். நிலைமையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர தீவிர பொலீஸ் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஜெயலலிதா தனது சினிமா வரலாற்றிலும் அரசியல் வரலாற்றிலும் பெரும தடைக் கற்களைத் தாண்டி வந்த ஒரு சாதனையாளர். அவரது கடந்தகாலம் மிகவும் போராட்டம் நிறைந்தது.

இவ்வேளையில் ஜெயலலிதாவின் சினிமா மற்றும் அரசியல் அனுபவங்கள் குறித்து இவ்விடத்தில் ஆராய்வது மிகப் பொருத்தமாகும்.

ஜெயலலிதா தனது அரசியல் வாழ்க்கையில் சந்திக்காத சிக்கல்களும், கஷ்டங்களும் இல்லை. ஆனாலும் அவற்றையெல்லாம் கடந்து தமிழகத்தின் முதலமைச்சர் நாற்காலியில் ஐந்தாவது முறையாக அமர்ந்தார்.

அவர் மீது ஏராளமான விமர்சனங்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் அவரது தனிப்பட்ட வாழ்க்கையைப் பொறுத்தவரை, அது அவரது கையில் இல்லை. அவரது வாழ்க்கையை இதுவரை மூன்று



கால கட்டங்களாகப் பிரித்தால் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒருவர் என மூன்று பேர் அவரது வாழ்க்கை முழுக்க ஆளுமை செய்திருக்கின்றனர்.

ஜெயராம், சந்தியா தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்த ஜெயலலிதாவுக்கு கோமள வள்ளி என்று தான் பெயர் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அம்மா அவரை "அம்மு" என்று தான் செல்லமாக அழைத்து வந்தார். தாய் சந்தியா அம்முவை கவனமாக வளர்த்து வந்தார். அவருடைய அனுமதி இல்லாமல் அம்மு எதையும் செய்ய முடியாது.

அம்மு தனக்கு என்று தனியே எந்த முடிவையும் எடுக்க முடியாது. முழுக்க முழுக்க தாய் சந்தியாதான் அம்முவின் வாழ்க்கையில் இருந்தார். படப்பிடிப்புக்கு சந்தியா செல்லும் போதும், அவர் அருகில் இல்லாவிட்டாலும் அவருடைய கட்டுப்பாட்டில்தான் அம்மு வளர்ந்தார். சட்டம் படிக்க விரும்பிய அம்மு, நடிக்க வந்ததும் தாய் சந்தியாவின் நிர்ப்பந்தத்தினால்தான். குடும்ப சூழ்நிலையும் அதற்கு ஒரு காரணம். எந்தப் படத்தில் நடிக்க வேண்டும், எவ்வளவு சம்பளம் என அனைத்தையும் தாய் சந்தியாதான் கவனித்து வந்தார்.சந்தியா இறந்த பிறகு ஜெயலலிதாவின் அரசியல் குருவான எம்.ஜி.ஆர். அவரது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத சக்தியாகத் திகழ்ந்தார்.

ஜெயலலிதாவின் துணிச்சலும், அவரது திறமையும் எந்தக் காரியத்தையும் முடித்துக் காட்டும் தன்மையும் எம். ஜி.ஆரைக் கவர்ந் திருந்தது. சொல்லப்போனால் ஜெயலலிதா எந்தப் படத்தில் நடிக்க வேண்டும், எதில் நடிக்கக் கூடாது, எங்கு போக வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்யும் அளவுக்கு எம்.ஜி.ஆர். ஜெயலலிதா மீது மிகவும் செல்வாக்குக் கொண்டிருந்தார்.

ஜெயலலிதாவுக்கு அ.தி.மு.கவில் எம்.ஜி.ஆர் கொடுத்த பொறுப்புகள் காரணமாக நாளடைவில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் கொள்கை பரப்புச் செயலாளர் பொறுப்பில் இருந்தெல்லாம் கூட ஜெயலலிதா நீக்கப்பட்டார். அதையும் மீறி எம்.ஜி. ஆரின் தவிர்க்க முடியாத அரசியல் வாரிசாக ஜெயலலிதா உருவெடுத்தார்.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப்பின் பிளவுபட்டிருந்த அ.தி.மு.கவை ஒன்றிணைத்து வெற்றியின் பாதையை நோக்கித் தனி ஆளாக வளர்த்தெடுத்தார் ஜெயலலிதா. ஜெயலலிதாவுக்கு இரத்த உறவுகள் இருந்தாலும் கூட அவர்கள் யாரையும் பெரிதாக தனக்கு அருகில் சேர்த்துக் கொள்ளவில்லை.

வடியோ லைப்ரரி வைத்திருந்த சசிகலா, வீடியோ நாடாக்கள் கொடுக்க வந்த போது ஜெயலலிதாவுடன் பழகினார். நாளடைவில் ஜெயலலிதாவின் அரசியல் முடிவுகளில் சசிகலாவும் ஆளுமை செய்தார். சசிகலாவால் ஜெயலலிதாவுக்கு எவ்வளவோ சிக்கல்களும், துன்பங்களும் வந்தன. ஆனால் அவற்றையெல்லாம் தாண்டி தனது உடன்பிறவா சகோதரி என்று ஜெயலலிதாவே குறிப்பிடும் அளவுக்கு சசிகலாவின் செல்வாக்கு உயர்ந்தது.

ஜெயலலிதா நம்பும் ஒரே நெருங்கிய நபராக சசிகலா மட்டுமே கடைசி வரை இருக்கிறார். சந்தியா, எம்.ஜி.ஆர், சசிகலா மூவரும்தான் தனது நலம் விரும்பிகள் என்று பரிபூரணமாக நம்பினார். ஜெயலலிதாவின் சுக துக்கங்கள் அனைத்தையும் பகிர்ந்து கொள்ள மூவர்தான் அவர் அருகில் இருந்தனர்.

சிறு வயதில் தன் மீது செலுத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிர்வினை ஆற்றத் தெரியாமல், தனியே அறைக்குள் சென்று அழுத அம்முவில் இருந்து, அப்பலோவில் யாரையும் அருகே அனுமதிக்காத அம்மா வரையான ஜெயலலிதா இறுக்கமான ஒரு நபராகவும், யாரும் நெருங்க முடியாத ஒரு நபராகவும் இருப்பதற்கு இவர்கள் மூவரும் கூட ஒரு காரணம்.

இந்த உலகத்தின், மிகவும் கடினமான வேலை எனக்குப் பணிக்கப்பட்டாலும், நான் அதற்கு என்னைத் தயார் செய்து கொள்வேன்" இது நடிகையாக புகழ்பெற்ற பின் ஜெயலலிதா சொன்னது. ஆனால், தொடக்கத்திலிருந்தே அவர் அப்படியான மனநிலையில் தான் இருந்திருக்கிறார். நடிக்க விருப்பமில்லை.

ஒரு கட்டாயத்தின் பேரிலதான் நடிக்கத் தொடங்கினார் ஆனால் அதை அம்மு விளையாட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. படிப்பில், நாட்டியத்தில் எப்படித் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, உச்சங்களைத் தொட்டாரோ அது போலத்தான் நடிப்பையும் கையாண்டார். விடுமுறை நாட்களில் தனக்குப் பிடித்த வேலையைச் செய்ய முடியவில்லையே என்ற எந்த ஆயாசமும் அவருக்கு இல்லை. தன் ஆன்மாவிலிருந்து சிறந்ததை எடுத்து வழங்கினார் அதனால்தானா என்னவோ... அவர் வேணடாம வேண்டாம்என்றாலும அவருக்கு வாய்ப்பு வந்து கொண்டே இருந்தது.

ஆம், 'எபிசில்' ஆவணப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே, அவருக்கு அடுத்த வாய்ப்பு வந்தது. வாய்ப்புகள் யாருக்காகவும் காத்திருக்காது. அது வரும் போது இறுகத் தழுவிக் கொள்ள வேண்டும் என்பார்கள். ஆனால், அவருக்காக வாய்ப்புக் காத்திருந்தது. நாட்கள் கணக்கில் அல்ல, மாதக்கணக்கில். அமெரிக்க நகைச்சுவை நடிகர் மில்டன், "வாய்ப்புகள் கதவைத் தட்டவில்லை என்றால், கதவுகளை நீங்களே உருவாக்குங்கள்..." என்றார்.

அம்முவுக்கு ஏறத்தாழ ஒன்பது மாத காலம், வாய்ப்பு கதவைத் தட்டி விட்டு, அவர் திறப்பார் என்று வாசலிலேயே காத்துக் கிடந்தது.

சந்தியா அப்போது, 'நன்ன கர்த்தவ்யா' என்ற கன்னடப் படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அதில், அவருக்கு மாமியார் வேடம்.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம் பார்க்க..)

# ஜெயலலிதா கடந்து வந்த ...





படத்தின் நாயகி, ஒரு பால்ய விதவை. அந்தக் கதாபாத்திரத்தில் நடிக்கச் சரியான நபர் கிடைக்கவில்லை. படத்தின் இயக்குநர் ராகவய்யா இதற்காக ஒரு நெடிய தேடுதல் வேட்டையையே நடத்தி விட்டார். ஆனால், பொருத்தமான நபர்தான் கிடைக்கவில்லை. ஒரு கட்டத்தில் சலிப்படைந்து, அந்தக் கதாபாத்திரம் சம்பந்தப்பட்ட காட்சிகளை விட்டு வைத்து விட்டு, மற்ற காட்சிகளை எடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

அந்தச் சமயத்தில்தான் மீண்டும் காலம், தன் விளையாட்டைத தொடாங்கியது. ஆம், ஒருநாள் வேறொரு வேலையாக சந்தியாவின் வீட்டுக்கு வந்த தயாரிப்பாளர்கள், அம்முவைப் பார்க்கிறார்கள். திரைப்படத்தில் ஒரு முக்கியமான காட்சியின் அதிர்வை பார்வையாளனுக்குக்கடத்த அலை, பறவைகள் எல்லாம் சில நொடிகளுக்கு உறைந்து நிற்குமே.... அதுபோல நின்றதா என்றெல்லாம் தெரியவில்லை.

ஆனால், நிச்சயம் அந்தத் தயாரிப்பாளர்கள் இருவரும் திகைத்துத்தான் போய் விட்டார்கள். அதில், ஒருவர் வாய் விட்டே கூறி விட்டார். "நாங்கள் தேடிய முகப் பொலிவுள்ள கதாநாயகி இதே? இங்கேயே இருக்கிறாரே... உங்கள் பெண்ணையே எங்கள் கதாநாயகியாகப் போடப் போகிறோம்" என்றார், ஒரு வாய்ப்பை வழங்கிய மனநிலையில். ஆனால், அதற்கு சந்தியா சம்மதிக்கவில்லை."முடியாது. அவளுக்கு அதில் விருப்பம் இல்லை. எனக்கும் கூடத்தான்... அவள் படிக்க விரும்புகிறாள். தயவு செய்து வேறொரு நபரை தேடிக் கொள்ளுங்கள்" என்றார் மென்மையான மொழியில். வந்தவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அரை மனதுடன் கிளம்புகிறார்கள். ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன. முக்கிய கதாபாத்திரம் இல்லாததால், நத்தை வேகத்தில் படப்பிடிப்பு நடந்து கொண்டு இருக்கிறது.

அந்தச் சமயத்தில் மீண்டும் அந்தத் தயாரிப்பாளர்கள் சந்தியாவைச் சந்தித்து. "இன்னும் எங்கள் படத்துக்குக் கதாநாயகி அமையவில்லை. உங்கள் பெண்ணையே தயவு செய்து நடிக்க அனுமதியுங்கள்" என்கிறார்கள். மீண்டும்... மீண்டும் கேட்கிறார்கள். இவர்களை உதாசீனப்படுத்தவும் முடியாது.

அதே சமயத்தில், அம்முவை நடிக்க அனுப்பவும் முடியாது. சரி... இன்னும் கொஞ்சம் காலத்தைக் கடத்திப் பார்ப்போம். ஒரு வேளை, அதற்குள் இவர்கள் வேறொரு நாயகியைக் கண்டடையலாம் என்று சமயோசிதமாக யோசித்து இப்படியாகச் சொல்கிறார். "அம்முவின் படிப்புக் கெடக் கூடாது. அவளுக்குக் கோடை விடுமுறை வரும்வரை காத்திருப்பீர்களா?" என்று ஒப்புக்குக் கேட்கிறார்.

முடியாது என்று சொல்லிவிட்டால் சந்தோசம்... காத்திருக்கிறோம் என்று சொன்னாலும் பிழை இல்லை. இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன. இதுதான் அப்போதைக்கு சந்தியாவின் எண்ணம். "சரி காத்திருக்கிறோம்..." என்கிறார்கள் தயாரிப்பாளர்கள். அந்த வாய்ப்பு மூன்று மாத காலம், காதலிக்கு காத்திருக்கும் காதலன் போல, அம்முவின் வீட்டு வாசலிலேயே காத்திருக்கிறது.

கோடை விடுமுறை வருகிறது. அந்தத் தயாரிப்பாளர்களும் வருகிறார்கள். "தொடர்ந்து நடிக்கச் செய்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி... உங்கள் மகளை இந்த முறை மட்டும் நடிக்க அனுமதியுங்கள்" என்று கேட்கிறார்கள். சந்தியாவுக்கு பலமான யோசனை. நிலைமை கையை மீறிப் போய்விட்டது. இனி எதுவும் செய்ய முடியாது.

அம்முவை நடிக்க அனுமதித்து விட வேண்டியதுதானா... என்ற எண்ணம் எழுகிறது.

சரி, அம்முவிடமே கேட்டு விடுவோம் என்ற முடிவுக்கு வருகிறார். அம்முவிடம் நடந்த எல்லாவற்றையும் சொல்கிறார். "என்ன சொல்கிறாய் அம்மு...? எனக்கும் விருப்பம் இல்லை தான். தொடர்ந்து கேட்கிறார்கள், புறந்தள்ள முடியவில்லை... என்ன செய்யலாம்" என்று கேட்கிறார். அம்மு இதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டார் என்பது தான் சந்தியாவின் எண்ணமாக இருந்தது. ஆனால், அன்று அம்மு என்ன மனநிலையில் இருந்தார் என்று தெரியவில்லை. "நான் திறமையாக நடிப்பேன் என்று உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை" என்கிறார்.

வாசலில் ஒன்பது மாத காலமாகக் காத்திருந்த வாய்ப்பு, அம்முவை உற்சாகமாகத் தழுவிக் கொள்கிறது. இவ்வாறுதான் அவரது சினிமா பிரவேசம் அமைந்தது.

ஜெயலலிதா குறித்து எல்லோரும் வியக்கும் விடயம் அவரின் மொழி ஆளுமை. தமிழ் தவிர்த்து, அவரால் எந்த தடுமாற்றமும் இல்லாமல் மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை சரளமாக பேச முடியும்.

2007ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் மிக சரளமாக ஹிந்தி பேசிய போது, அந்த மேடையில் இருந்த முலாயம் சிங்கே வியந்துதான் போனார்.

அதுபோல ஒருமுறை, ஆந்திராவில் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் ஆங்கிலத்தில் உரையாற்றத் தொடங்கினார். பெரும் எண்ணிக்கையில் கூடி இருந்த பாமர மக்களுக்கு ஆங்கிலம் புரியவில்லை என்பதை உணர்ந்த அவர், சட்டென்று தெலுங்கில் உரையாற்றத் தொடங்கி விட்டார்.

சிறுவயதில் மெட்ரிக் பள்ளியில் படித்ததால் அவருக்கு ஆங்கிலம் சுலபமாக வந்தது. இன்னும் சொல்லப் போனால் சேர்ச் பார்க் பள்ளியில் படித்த காலத்தில் தமிழில் பேசத்தான் தடுமாறினாரே தவிர, ஆங்கிலத்தில் சரளமாக பேசினார்.



பிறகு கன்னடம்... தான் பால்ய வயதை மைசூர் மற்றும் பெங்களூரில் கழித்ததால் அவருக்கு அந்த மொழியும் இயல்பாக வந்தது.

தமிழ், ஆங்கிலம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளைத் தவிர மற்ற மொழிகளை எல்லாம், அவர் திரை உலகுக்கு வந்த பிறகு தனது தேவையின் கருதி கற்றவை. அதே நேரத்தில் மற்ற மொழிகள் மீதி ருந்த விருப்பத்தினாலும் கூட தாம் மொழிகள் கற்ற பின்னணியை அவரே முன்பொரு முறை அளித்த பேட்டியில் பகிர் ந்திருக்கிறார்.

அவரது வார்த்தைகளிலிருந்தே "தமிழ் எனது தாய் மொழி. மைசூரில் சிறு வயதில் சில காலங்கள் வரை இருந்ததால் அங்கு வீட்டில் வேலையாட்களுடனும், அக்கம் பக்கத்தில் உள்ள சிறுமிகளுடனும் பேசிப் பேசி கன்னடத்தைக் கற்றுக் கொண்டேன்.

அதே நேரம் அவர் தெலுங்கு கற்ற கதை மிக சுவாரஸ்யமானது. அதையும் அவரே சொல்கிறார்." நான் 'மனசுலலு மமதலு' என்ற தெலுங்குப் படத்துக்கு ஒப்பந்தமானேன். அப்போது தயாரிப்பாளர்களிடம், 'எனக்குத் தெலுங்கு தெரியாதே!' என்றேன். அவர்கள் உடனடியாக தெலுங்கு ஆசிரியரை எனக்கு மொழி கற்பிக்க பணியமர்த்தி விட்டார்கள்.

தினமும் காலை சரியாக ஆறு மணிக்கு அந்த தெலுங்கு ஆசிரியர் வருவார். நான் அந்த சமயத்தில் தான், நல்ல தூக்கத்தில் இருப்பேன். என்னை வீட்டில் எழுப்புவார்கள். தூக்கக் கலக்கத்தில்தான் வகுப்புக்குச் செல்வேன்.

அது மட்டுமல்லாமல், அப்போதெல்லாம் நான் மிகவும் சங்கோஜி. யாராவது நாலு வார்த்தை பேசினால், நான் ஒரு வார்த்தை தான் பதில் பேசுவேன். தெலுங்கு பண்டிட் ஏதாவது எனக்கு கோபம் வரும்படி சொல்லிச் சீண்டி விடுவார். நானும் அதற்குப் பலமாக பதில் அளிப்பேன். தெலுங்கில் அதற்கு எவ்வாறு பதில் அளிக்க வேண்டும என்று கூறி, மேலும் சீண்டுவார்.

நான் கத்த, அவர் கத்த, பெரிய ரகளையாகிவிடும். நான் இப்படிக் கத்தி கத்திக் கற்றுக் கொண்டது தான் தெலுங்கு. இதனால் இரண்டு மாதத்தில் கற்க வேண் டிய தெலுங்கை சுமார் நாற்பது நாட்களிலேயே கற்றுக் கொண் டேன்" என்று தான் தெலுங்கு கற்ற அனுபவத்தை பகிர்ந்திருக்கிறார்.

பிற்காலத்தில் வேண்டுமானால் ஜெயலலிதா தன்னை மிகவும் இறுக்கமானவராக காட்டிக் கொள்ளலாம். இயல்பான தன் விருப்பங்களை தனக்குள்ளேயே வைத்து பூட்டிக் கொள்ளலாம். ஆனால், தன் பதின்ம வயதில், அந்த வயதுக்கே உரிய அபிலாஷைகளுடன் தான் ஜெயலலிதா இருந்தார்.

ஜெயலலிதாவுக்கு தன் சிறு வயதிலேயே தன்னை அலங்கரித்துக் கொள்வதில் அலாதி விருப்பம் இருந்திருக்கிறது. சிறு வயதில் சந்தியாவுக்கு தெரியாமல், அவரின் மேக்கப் பெட்டியைத் திறந்து தன்னை அலங்கரித்து இருக்கிறார். இதற்காக, சந்தியாவிடம் அடியும் வாங்கி இருக்கிறார்.

ஜெயலலிதாவே ஒரு முறை தன் அழகு குறிப்பை பகிர்ந்திருக்கிறார். அந்த அழகுக் குறிப்புக்கு அவர் 'கிளியோபாத்ரா ஸ்டைல்' என்று பெயரும் வைத்தார். அது மட்டுமல்ல... அவர் அப்போது இன்னொரு அழகுக் குறிப்பையும் பகிர்ந்திருக்கிறார். அது மிகவும் எளிமையான அழகுக் குறிப்பு தான். ஆண், பெண் என எந்த பேதங்களும் இல்லாமல் அனைவரும் பின்பற்ற வேண்டியதும் கூட... அந்த அழகுக் குறிப்பு இதுதான், "மனதை அழுக்கில்லாமல், குழப்பமில்லாமல்... தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.. நிச்சயம் உங்கள் முகம் மிளிரும்.

அவருக்குள்ளும் ஆயிரம் சின்னச் சின்ன ஆசைகள் இருந்திருக்கின்றன! ஜெயலலிதா ஆரம்பகாலங்களில் தனது கலை மற்றும் அரசியல் வாழ்வின் பல்வேறு காலகட்டங்களிலும் அச்சு ஊடகத்தினருடன் மனம் திறந்த நட்பு பாராட்டியவராகவே இருந்திருக்கிறார்.

எப்போதிருந்து அவர் பத்திரிகையாளர்களைப் புறக்கணிக்கத் தொடங்கினார் எனில், அது சட்டசபையில் நடந்த புடைவை இழுப்பு சம்பவங்களின் பின்னானதாகவோ, வளர்ப்பு மகன் திருமண விவகாரங்களின் பின்னதாகவோ இருக்கலாம் என்றே அனுமானமாகிறது. அதுவரையிலான ஜெயலலிதா ஒரு மனம் திறந்த பேச்சாளராகவே இருந்திருக்கிறார்.

ஒரு முறை கைத்தறிப் புடைவைகளை உடுத்தும் பழக்கத்தை மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கில் பிரபலங்களை வைத்து புடைவை விற்பனை செய்யும் வகையில் சிறப்புக் கட்டுரை ஒன்றுக்கு தயார் செய்து விட்டு, புடைவை விற்கும் பிரபலமாக அப்போதைய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சியின் புதுக் கொள்கை பரப்புச் செயலாளரான ஜெயலலிதாவை அணுகி இருக்கிறார்கள்.

தன்னை அணுகிய நிருபரின் வேண்டுகோளுக்கு முதலில் சற்றுத் தயக்கம் காட்டி விடயத்தை முழுவதுமாக கேட்டறிந்த ஜெயலலிதா பின்பு அதன் பின்னிருக்கும் நல்ல நோக்கம் அறிந்ததும் தயங்காமல் நிருபர் குழாமுடன் வந்து புடைவை விற்றுக் காட்டியிருக்கிறார். சும்மா அல்ல ஒவ்வொரு கைத்தறிப் புடைவை பற்றியும் மிகத் துல்லியமாக விபரம் அறிந்து கொண்டு வாடிக்கையாளர்களுக்கு புடைவைகளைப் பற்றி தெளிவாக எடுத்துக் கூறி புடைவை விற்றுக் காட்டியிருக்கிறார்.

அப்போதெல்லாம் ஜெயலலிதா வெளிப்படைத் தன்மை நிறைந்த நபராகவுமே இருந்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு உதாரணம். இது மட்டுமல்ல தெலுங்கு நடிகர் ஷோபன் பாபுவுடனான தனது 'லிவிங் டுகெதர்' உறவாகட்டும், குமுதம் இதழில் அவர் எழுதத் தொடங்கி பாதியில் நிறுத்திய சுயசரிதையாகட்டும் அனைத்திலுமே ஒரு வெளிப்படைத் தன்மை மட்டுமல்ல, பத்திரிகையாளர்களுடனான அவரது நட்பு கலந்த உறவும் வெளிப்படும் வண்ணமாகத் தான் இருந்திருக்கிறது.

அவரது ஆரம்ப கால வாழ்க்கை. இவையெல்லாம் தாண்டி தான் நினைத்தே பார்த்திராத வகையில் தனது வாழ்வைத் தீர்மானித்த இரண்டு மிகப்பெரும் சக்திகளாக ஜெயலலிதா குறிப்பிட்டது இருவரைத் தான். முதலாமவர் அவரது தாய் வேதவள்ளி என்கிற சந்தியா. இரண்டாமவர் எம்.ஜி.ஆர்.

(முற்றும்)

# தமிழகத்திற்கு டிசெம்பர் மாதம் ஒரு துரதிர்ஷ்டமான மாதம்

தமிழகம் மீண்டும் ஒரு பேரிழப்பை இந்த டிசெம்பர் மாதத்தில் சந்தித்திருப்பது அரசியல் சமூக வட்டாரத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்திற்கு டிசெம்பர் மாதம் துரதிர்ஷ்டமானது என மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது. அ.தி. மு.க. நிறுவனத் தலைவர் மற்றும் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி. இராமச்சந்திரன் இறந்ததும் இதே டிசெம்பர் மாதத்தில்தான்.

அ.தி.மு.க.நிறுவனத் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆர்.கடந்த 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி நீண்ட மருத்துவ சிகிச்சைக்கு பின்னர் காலமானார்.

அதேபோன்று எம்.ஜி.ஆ ரால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டு 6 முறை முத லமைச்சராக பதவி வகித்த ஜெயலலிதாவும் தற்போது டிசெம பர் மாதத்தில் காலமாகியுள்ளார்.

இவரும்எம்ஜிஆர்போன்று நீண்ட நாட்கள் மருத்துவ மனை சிகிச்சைக்கு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். எம்.ஜி.ஆர். தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக தெரிவான பின்னர் 1987 ஆம் ஆண்டு பதவியில் இரு க்கும் போது காலமானார்.

ஜெயலலிதாவும் தொட ர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக தெரிவான பின்னர் பதவியில் இருக்கும் போதே மறைந்துள்ளார்.

இதேபோன்றுதி.மு.க. மூத்த தலைவர்களில் ஒருவரும் முதலமைச்சருமான அண்ணாவும் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சி பொறுப்பேற்று பதவியில் இருக்கும் போதே மரணமடைந்துள்ளார்.

மட்டுமின்றி இயற்கையும் தமிழக குடிமக்களை கடந்த பல ஆண்டுகளாக நவம்பர், டிசெம்பர் மாதங்களில் கொடூரமாக சோதித்து வருகிறது.

உலகையே உலுக்கிய 2004 ஆம் ஆண்டு சுனாமியால் தமிழகம் கடுமையாக பாதிக்கப்பட்டதும் இதே டிசெம்பர் 26 ஆம் திகதி தான்.

மட்டுமின்றி சென்னை, காஞ்சிபுரம், கடலூர், திருவள்ளூர் மற்றும் பல பகுதிகளில் பெரு வெள்ளத்தால் மக்கள் உயிரையும் உடைமைகளையும் இழந்தது கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்தான். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 100 | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 45 | 60 | 50 | 100 | 60 |
| தக்காளி | 80 | 80 | 45 | 80 | 60 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 60 | 45 | 60 | 60 | 60 | 50 |
| கரட் | 140 | 60 | 70 | 80-120 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 80 | 80 | 40 | 80 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 35 | 50 | 40 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 90 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 250 | 130 | 180 | 140 | 200 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 80 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 60 | 60 | 70 | 120 | 60 |
| பயற்றங்காய் | 180 | 160 | 110 | 180 | 100 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 200 | 90 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 60 | 60 | 120 | 60 |
| கறிமிளகாய் | 180 | 100 | 120 | 200 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 90 | 150-200 | 100 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 300 | – | 200 | 160 | 280 | 240 |
| கத்தரிதும்பிளா | 70 | 30 | 70 | 60 | – | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 400 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-30 | 50 | 35 | 30-40 | 50 |
| இராசவள்ளி | – | – | – | – | 300 | – | – |
| வெங்காயப்பூ | 160 | – | – | – | – | – | – |
| முள்ளங்கி | 80 | – | 50 | 60 | 50 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 35 | – | 10 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | – | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | – | – | 80 | 70 | 120 | – |

# வடக்கில் பௌத்த விஹாரைகள் அமைப்பதற்குத் தடையில்லை

## தடுக்கும் உரிமை மாகாணசபைக்கு இல்லை–விஜயதாஸ

வடக்கில் பௌத்த விஹாரைகளை அமைப்பதற்கு தடையில்லை என நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில். இலங்கையில் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அனைவரும் தத்தமது மத வழிபாடுகளை மேற்கொள்ளவும் சட்டத்திற்கு அமைய வழி பாட்டுத் தலங்களை அமைத்துக்கொள்ளவும் உரிமையுண்டு.

இலங்கையின் பெரும் பான்மை இனமான சிங்கள பௌத்தர்கள் வடக்கில் விஹா ரைகளை அமைக்கக் கூடாது என வடக்கு மாகாணசபை கூறுவது நேர்த்தியமான அடிப்படையும் அற்ற கருத்தாகும். வடக்கு மாகாண சபை எவ்வாறான எதிர்ப்பை வெளியிட்டாலும் அதனை ஓர் அங்கீகரிக்கப்பட்ட எதிர்ப்பாக நாம் கருதப் போவதில்லை. அண்மையில் வடக்கு மாகாணசபையில் பௌத்த விஹா ரைகள் அமைப்பது குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேணடியதில்லை. அரசியல் சாசனத்திற்கு புறம்பான வகையில் வடமாகாணசபையினால் சட்டங்களை கொண்டு வர முடியாது. வடக்கு, கிழக்கில் காணப்படும் புராதன பௌத்த விஹாரைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 920

Search for people, places and things Nagendram Home

றோஜா



நமது உதடுகளை அரண்மனை வாயிற் கதவுகளைப் போல பாதுகாக்க வேண்டும். நமது வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும் சாந்தமானதாகவும் இதமானதாகவும் இருக்க வேண்டும்.

-கௌதம புத்தர்

சிந்து

ரதி:ஏ.ரி.எம். மிஷினே வெடிக்கிற அளவுக்கு என்னடி செஞ்ச...?



லதா:ENTER YOUR PIN கேட்டப்ப பேஸில் இருந்து பெரிய பின்னா எடுத்து உள்ள விட்டேன்.சொட் சர்கூட் ஆகி வெடிச்சிடிச்சு

தனு

அண்ணே நிலாவுல தண்ணி இருக்க இல்லையா தெரியலையே ராஜா



இருக்கு அண்ணே அங்க தண்ணி, எண்ணெய், கிரைன்டர், உளுந்து எல்லாம் இருக்கு இதெல்லாம் இல்லாமையா பாட்டி அங்க வடை சுடுது

சிந்து

பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுக்கணும்,ஆனா செருப்பு வரை தெரியணும்..




எடுத்துறலாம், செருப்ப கழட்டி தலையில வச்சிக்கிட்டு சேர்ல உக்காரு... ☺

தர்மா

சிங்கம் 3 சூட்டிங்கில்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பணமதிப்பு, தென்சீனக்கடல் விவகாரம் கடுமையாக விமர்சனம் செய்த ட்ரம்ப்

பண மதிப்பைக் குறைத்து காட்டுவதாகவும், தென்சீனக் கடல் விவகாரத்தில் இராணுவ பலத்தை காட்டுவதாகவும் சீனா மீது டிரம்ப் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க கொள்கைகளில் இருந்து விலகி, தாய்வான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

1979இற்குப் பின் அமெரிக்க ஜனாதிபதி ஒருவர், தாய்வான் ஜனாதிபதியுடன் பேசுவது இதுவே முதல்முறை. இந்த நடவடிக்கையால் சீனா கடும் கோபம் அடைந்தது. இந்த நிலையில் டுவிட்டர் மூலம் சீனாவை கடுமையாக சீண்டியுள்ளார் டிரம்ப்.


தென்சீனக்கடல் எல்லை விவகாரம், பண மதிப்பை குறைத்துக் காட்டுகிறது என பதிலடி கொடுத்துள்ளார். இதுதொடர்பாக ட்ரம்ப் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவு,

சீனா தனது பண மதிப்பை செயற்கையாக குறைத்துக் காட்டுகிறது. இதன் மூலம் நமது நிறுவனங்களுக்கு கடினத் தன்மையை ஏற்படுத்துகிறது. அமெரிக்க வேலைவாய்ப்புக்களை தட்டிப்பறிக்கிறது.

நமது பொருட்கள் அவர்களது நாட்டிற்குள் செல்லும் போது கடும் வரி விதிக்கப்படுகிறது. தென்சீனக்கடலில் இராணுவத் தளத்தை ஏற்படுத்தி தனது இராணுவ பலத்தைக் காட்ட முயல்கிறது. இதைப்பற்றி எல்லாம் நான் கவலைப்பட மாட்டேன்.

இவ்வாறு அவர் அடுத்தடுத்து இரண்டு டுவிட்டர் பதிவில் சீனாவை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். ட்ரம்பின் இந்த விமர்சனம் சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ-7)

# ஜெயலலிதாவுக்கு இறப்புச் சான்றிதழ்






முதல்வர் ஜெயலலிதா, உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னை ஆயிரம் விளக்கு கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் செப்டெம்பர் 22ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். அவர், டிசெம்பர் 5ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் மரணம் அடைந்தார். பொது மக்களின் அஞ்சலிக்காக அவரது உடல் ராஜாஜி அரங்கத்தில் நேற்று வைக்கப்பட்டுள்ளது. நீண்ட வரிசையில் இருந்து பொதுமக்கள் ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

சென்னை மாநகராட்சி இணையத்தளத்தில் ஜெயலலிதாவின் இறப்புச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் அவரது குடும்ப விபரங்கள் மற்றும் முகவரி, இறப்பு நேரம் உள்ளிட்ட விபரங்கள உள்ளன. அந்த சான்றிதழில சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலர் (பொறுப்பு) டாக்டர் செந்தில் நாதன் கையெழுத்திட்டுள்ளார். இந்த சான்றிதழ் 6ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# அலெப்போவில் போரை நிறுத்த ரஷ்யா - சீனா முற்றாக மறுப்பு



கிளர்ச்சியாளர்களின் முற்றுகைக்கு உட்பட்ட சிரியாவின் அலெப்போ நகரில் ஏழு நாட்கள யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் திட்டத்திற்கு ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தமது வீற்றோ அதிகாரத்தை பயன்படுத்தி மறுப்பு தெரிவித்துள்ளன.

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் பாதுகாப்புச் சபையினால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக ரஷ்யா இதுவரை ஆறு தடவைகள் வீற்றோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளது. இதேவேளை, சீனாவினால் ஐந்து தடவைகள் தடுக்கப்பட்டுள்ளன.

நியூசிலாந்து, எகிப்து மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து தயாரிந்துள்ள இந்த திட்ட வரைபிற்கு வெனிசுலாவும் எதிராக வாக்களித்துள்ளது. இந்த வாக்கெடுப்பில் அங்கோலா கலந்து கொள்ளாத அதேவேளை, எஞ்சிய 11 நாடுகளும் ஆதரவாக வாக்களித்த நிலையில், அலெப்போவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பான வரைவுத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் ஸ்பெயின் தூதுவர் தெரிவித்தார்.

இவ்வாறான போர்நிறுத்தமானது போராளிகள் தங்களது ஆயுத இருப்பை பலப்படுத்தவும், தமது நிலைகளை வலுப்படுத்தவும் சாதகமாக அமைவதாகவும், இதனால் பொதுமக்களின் நிலை மேலும் மோசமாகும். எனவே இதற்கு ஒருபோதும் ஆதரவளிக்க முடியாது என்று ஐ.நா. சபைக்கான ரஷ்ய தூதுவர் விடாலி சுர்கின் தெரிவித்தார். (இ-7)

# ரோஹின்கியா முஸ்லிம்கள் பயணித்த படகு பங்களாதேஷ் எல்லையில் ஆற்றில் மூழ்கியது

ரோஹின்கியா முஸ்லிம் மக்கள் மியன்மாரில் வன்முறைகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில், அங்கிருந்து பங்களாதேஷிற்கு தப்பிச் செல்ல முற்பட்டவர்கள் பயணித்த படகு எல்லை ஆற்றில் மூழ்கி விபத்திற்குள்ளானதில் பலர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷை சென்றடையும் வகையில் சுமார் 31 பேருடன் பயணித்த குறித்த படகினை மியன்மார் இராணுவத்தினர் விரட்டிச் சென்ற நிலையிலேயே இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆற்றுப் பகுதியில் பெண்ணொருவர் உதவி கோரி அவலக்குரல் எழுப்பியதை அடுத்து அங்கு சென்ற நிலையில், பெண்ணொருவரை மீட்டதாக பங்களா தேஷ் மீனவர் ஒருவர் தெரிவித்தார். இந்நிலையில், தன்னுடன பயணித்த ஏனையோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் தனக்கு தெரியவில்லை என மீட்கப்பட்ட பெண் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த படகில் பயணித்த ரோஹின் கியா மக்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்களில் இருவர் உடல்களில் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காணப்படுவதாகவும் ரோஹின்கியா வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இது தொடர்பில் பங்களாதேஷ் பொலிஸார் மற்றும் கடலோர காவற்படையினர் எவ்வித தகவல்களையும் வெளியிடாத நிலையில், இதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

ரோஹின்கியா மாநிலத்தில் மியன்மார் இராணுவத்தினரின் ஒடுக்குமுறைகள் காரணமாக சுமார் 30 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜெயலலிதா (VS) கருணாநிதி மறக்க முடியாத மோதல்கள்!



மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் கடந்த காலத்தை திரும்பிப் பார்த்தால் 8 முக்கிய சம்பவங்கள் அவரது வாழ்க்கையையே முற்றிலுமாக புரட்டிப் போட்டன.

ஜெயலலிதாவின் வாழ்க்கையை புரட்டிப்போட்ட சம்பவங்களில் குறிப்பிடத்தக்கவை, அவர் திரையுலகில் காலடி எடுத்து வைத்தது, எம்.ஜி.ஆருடனான சந்திப்பு, கருணாநிதியுடனான முதல் சட்டசபை மோதல் போன்றவைகள் ஆகும்.

எம்.ஜி.ஆரின் மனைவி வி.என்.ஜானகி அம்மையாருடன் ஏற்பட்ட மோதலில், அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னத்தைக் கைப்பற்றினார் ஜெயலலிதா. 1988ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் 27 சட்டமன்ற உறுப்பினர்களுடன் அதிமுக எதிர்க்கட்சியாக, வீற்றிருக்க, தமிழகச் சட்டமன்றத்தின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவியாக ஜெயலலிதா அதிமுகவை வழிநடத்தினார்.

1989ஆம் ஆண்டு கருணாநிதி முதல்வராக இருந்த போது எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டார் ஜெயலலிதா. 1989ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி, தமிழகச் சட்டமன்றத்தில் நடந்த அமளியில் ஜெயலலிதா சேலை இழுக்கப்பட்டதாகவும், உடல் ரீதியாகத் தாக்கப்பட்டதாகவும் புகார்கள் எழுந்தன.

தலைவிரி கோலமாக, கிழிந்த சேலையுடன் ஜெயலலிதா சட்டமன்றத்தை விட்டு வெளியே வந்த அந்தச் சம்பவத்தின் காட்சிகள் தமிழக மக்களிடையே, குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பெண் வாக்காளர்களிடையே ஜெயலலிதாவுக்கு அனுதாபத்தை ஏற்படுத்தியது.

அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் அவருக்குத் தமிழக முதல்வராகும் வெற்றி வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த காரணங்களில் இந்தச் சம்பவமும் முக்கிய இடம் வகித்தது.

சொத்துக்குவிப்பு புகார் எழுந்ததால், 1996ஆம் ஆண்டு தேர்தலில் மோசமான தோல்வியடைந்தார் ஜெயலலிதா. 1996இல் டிசெம்பர் 7ஆம் திகதி ஊழல் வழக்கிற்காக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும், தொடர்ந்து சில வாரங்கள் அவர் சிறைவாசத்தை அனுபவித்ததும் மக்களிடம் அனுதாபத்தை ஈட்டித் தந்தன.

ஆனால் சிறையில் அடைத்ததன் காரணமாகவே, கருணாநிதி மீது அவரும் அவரது கட்சியினரும் கடைசி வரை கோபத்தை மறக்காமல் காண்பித்துக் கொண்டிருந்தனர்.

அதேநேரம், ஜெயலலிதாவின் அந்தக் கைது சம்பவம் தான் அவருக்குள் மிகப் பெரிய மனமாற்றங்களை ஏற்படுத்தி, மீண்டும் அரசியலில் விட்ட இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தை அவருக்கு ஏற்படுத்தியது.

மீண்டும் விஸ்வரூபம் எடுத்து ஜெயலலிதா 2001ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றபோது, அடுத்தகட்டமாக செய்த வேலை, 2001ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதியன்று அதிகாலையில் கருணாநிதியை கைது செய்தது தான்.

மேம்பால ஊழல் வழக்கிற்காக கருணாநிதியை பொலிஸாரை அனுப்பி நள்ளிரவில் கைது செய்ததும், அது காட்சி ஊடகங்களில் மாறி மாறி காண்பிக்கப்பட்டதும் தேசம் முழுவதும் உற்று நோக்கப்பட்டது.

தமிழகத்தில், 2006ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தி.மு.க. ஆட்சி அமைத்ததும், நடந்த முதல் சட்டசபை கூட்டத் தொடரே சட்டசபை வரலாற்றில் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியது.

2006 மே 26ஆம் திகதி, சட்டசபையில் அ.தி.மு.கவினருக்கும் காங்கிரஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது தி.மு.கவினரும், அ.தி.மு.கவினரும் மாறி மாறி வசை மாரி பொழிந்தனர்.

இந்த சமயத்தில் அ.தி.மு.கவினர், முதல் வரிசையில் அமர்ந்திருந்த அமைச்சர்களை அடிக்கப் பாய்ந்தனர். குறிப்பாக தற்போது தி.மு.கவில் சேர்ந்துள்ள சேகர்பாபு, அப்போது முதல்வர் கருணாநிதியை தாக்க பாய்ந்தார்.

இதனால், சபையில் பரபரப்பு ஏற்பட்டது. இதன்பின், அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் சஸ்பெண்ட் செய்து, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரச்சினை ஏற்பட்ட சமயத்தில், ஜெயலலிதா சபையில் இல்லை. இதனால், அவரை சஸ்பெண்ட் செய்யவில்லை.

இதன்பின் ஓ.பன்னீர் செல்வத்திடம் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பறித்து தானே எதிர்க்கட்சித் தலைவரானார் ஜெயலலிதா. அதோடு மட்டுமன்றி, சட்டசபைக்கு தனி ஆளாக வந்து, ஆளுங்கட்சியை கடுமையாக விமர்சித்து பேசினார்.

இதனால், ஜெயலலிதாவின் துணிச்சல் அனைவராலும் பாராட்டப்பட்டது. அரசியலில் கடைசி மூச்சு வரை ஜெயலலிதா தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் மோதல் போக்கையே தொடர்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குற்றவாளிகள் வீதியில் நிற்பதால் அச்சமாகவுள்ளது-ரணில் சீண்டல்

ஆர்ப்பாட்டம் எனும் பெயரில், கொலைக்குற்றவாளிகள், பாலியல் வன்புணர்வாளர்கள் மற்றும் திருடர்கள் பிரதான வீதிகளை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு, தமது போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதானது பெரும் அச்சுறுத்தல் விடுப்பதாக உள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயர் கருஜெயசூரியவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இத்தகையை குற்றவாளிகளின் கூட்டத்துக்குள் நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பிக்கள்), குற்றவாளிகளாகவே பார்க்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 9.30மணிக்கு, சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்றத்துக்கு வரும் சுற்றுவட்டத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகைப் பிரயோகம் தொடர்பில் பிரஸ்தாபித்தனர்.

அத்துடன், ஆளும் கட்சியினரும் இந்த விவகாரம் தொடர்பில் கருத்துரைத்தனர். இதன்போதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். "நாடாளுமன்ற சுற்றுவட்ட வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வீதியின் ஒருபக்கம் மட்டுமே மூடப்பட்டுள்ளதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவல் சரியானதா? என எனக்குத் தெரியாது. எனினும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், நாடாளுமன்றத்தை சுற்றிவளைக்கப் போவதாக சூளுரைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் அல்லர். பிரதேச சபைகளின் தலைவர்களாக, தவிசாளர்களாக இருந்து திருடியவர்கள், கொள்ளையடித்தவர்கள் இதல் ஒருவர், 100 பெண்களை வன்புணர்ந்தவர். இன்னொருவர் வெளிநாட்டிலிருந்து வந்த ஜோடியில் பெண்ணைக் கொலை செய்தவர்.

இவ்வாறான குற்றவாளிகளே, வீதிகளை மறித்தது மட்டுமன்றி, நாடாளுமன்றத்தை சுற்றிவளைக்கப் போவதாக எச்சரித்து அச்சுறுத்தல் விடுத்தனர். இவ்வாறானவர்களின் நடவடிக்கையை ஆர்ப்பாட்டம் என்று கூறமுடியாது. அச்சுறுத்தல் என்றே சொல்லமுடியும். அந்த கோஷ்டியினருடன் இருக்கும் எம்.பிக்களை, குற்றவாளிகளாகவே பார்க்கவேண்டும். இந்த கொலைக் குற்றவாளிகள், வன்புணர்வாளர்கள், கொள்ளையாளர்கள் மற்றும் திருடர்கள் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டம் எனும் பெயரில் முன்னெடுக்கும் அச்சுறுத்தும் செயற்பாடானது, வீதிகளில் பயணிக்கும் எமக்கு அச்சமாகவே இருக்கின்றது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

**'அவர்கள் குண்டர்கள்'**

இந்த விவகாரத்தால் சபை சூடுபிடித்திருந்த நிலையில், எழுந்த சுஜீவ சேனசிங்க, ஒழுங்குப்பிரச்சினைகளை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் அல்லர். அவர்கள் குண்டர்கள். இவ்வாறான குண்டர்களுடன் சிரேஷ்ட அரசியல்வாதிகளான தினேஷ் மற்றும் பந்துல ஆகியோர் நிற்பது இளம் அரசியல்வாதிகளான தமக்கு தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்றார்.

இதனிடையே கருத்துரைத்த சபாநாயகர் கருஜெயசூரிய, இந்த விவகாரத்தால் குழுநிலை விவாதத்தின் நேரமும் குறைந்து செல்கிறது என்று சுட்டிக்காட்டியதுடன், நாடாளுமன்றத்துக்குள் 2000 பேரை அனுமதிக்கமுடியாது என்று சுட்டிக்காட்டி, சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவையை அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நகர்த்திச் சென்றார்.

**'மூட உத்தரவிட்டது யார்?'**

இதனிடையே எழுந்த வாசுதேவ நாணயக்கார எம்.பி. அன்றைய தினம் வீதியை மறித்து, வீதித்தடை போடப்பட்டிருந்தது. யாருடைய உத்தரவின் பேரில் இதனை பொலிஸார் செய்தனர். வீதியை மூடிவிடுமாறு நீங்கள் ஏதும் கூறினீர்களா? உங்களின் அறிவிப்பின் பேரிலா மூடப்பட்டது? வீதியை மூடி எமது சிறப்புரிமையை மீறிவிட்டனர்" என்று முறையிட்டார். இதன்போது, சற்றுக் கோபமடைந்த சபாநாயகர் கருஜெயசூரிய, என்னுடைய அதிகாரங்களை நான் ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்ததில்லை. நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு பொலிஸாரே பொறுப்பு, பாதுகாப்பு விடயங்களில் சகல விடயங்களிலும் என்னால் தலையிடமுடியாது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்வதற்கு, என்னுடைய அனுமதி தேவையில்லை" என்றார்.

**'எங்களைக் காக்கவும்'**

நாடாளுமன்றச் சுற்றுவட டத்தில் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸ் நடந்துகொண்ட விதம் குறித்து, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கேள்வியெழுப்பிய ஒன்றிணைந்த எதிரணியின் எம்.பியான தினேஷ் குணவர்த்தன, பொலிஸார் நடந்துகொண்ட விதம், எம்.பிக்களின் சுதந்திரத்தில் தலையிடுவதாக அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

எம்.பிக்கள் சிலரை அன்றைய தினம் வாகனங்களிலிருந்து இறக்கிய பொலிஸார் அவர்களை நடக்கவிட்டனர். அத்துடன் எங்களைச் சந்திப்பதற்கு, மக்களுக்கு உரிமையுண்டு. அதற்கான உரிமையை பாதுகாத்துத் தர வேண்டும் இவ்வாறான பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லும் பிரச்சினையாக்கிவிட வேண்டாம் என்றும் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

**'ஏன் சுற்றுகின்றீர்கள்?'**

நாடாளுமன்றத்தை சுற்றிவளைக்கப் போவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சுறுத்தினர் என்று சுட்டிக்காட்டிய சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, சனிக்கிழமை நாடாளுமன்ற அமர்வு நாளாகும். எம்.பிக்கள் என்றால் சபையில் இருக்க வேண்டும். ஏன் வீதிகளில் சுற்றித்திரிந்தீர்கள்? உங்களில் சுமார் நான்கு எம்.பிக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நின்றிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்துக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தமையால் அனைவரையும் உள்ளே விடமுடியாது. அது ஆபத்தானது என்று குறிப்பிட்டார்.

**'சண்டைபோட முடியாது'**

இதனிடையே கருத்து தெரிவித்த, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின எம்.பியான பந்துல குணவர்தன, "உத்தியோகபூர்வ வாகனத்தில் நாடாளுமன்றத்துக்கு நான் வந்தபோது, அவ்விடத்தில் வைத்து என்னை இறக்கிய பொலிஸார், நடந்துபோகுமாறு வலியுறுத்தினர். பொலிஸாருடன் என்னால் சண்டைபோடமுடியாது. அதனால், நான் நடந்தே சென்றேன் என்றார். (இ-7-10)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 06

"நான் கைகூப்பி கதறியபடி அவரது காலில் விழப் போனேன். பட்டென்று என் மார்பில் அடித்த வேகத்தோடு என் சுடிதார் துப்பட்டாவை அப்படியே பிடித்து இழுத்தார். அவர் இப்படிச் செய்வார் என எதிர்பார்க்கவில்லை. இது தொடக்கம் தான் வெளியே பையன்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உன்னை நிர்வாணமாக்கி விட்டு வெளியே போய் விடுவேன். பிறகு என்ன நடக்கும் என்று புரிகிறதா? என முறைத்தார்."



...எனக்கு அந்தப் பெண் வைத்தியரின் துணிச்சலைக் காண பிரமிப்பாக இருந்தது. எனக்கு அந்தப் பெண் வைத்தியர் யார் என்றே தெரியாது. ஆனாலும், என் மனதில் தெய்வமாக நின்று விட்டார். அன்று அவர் துணிந்து கருக் கலைப்பை செய்திருந்தால், அந்தக் குழந்தை பிறந்து வளர்ந்து படித்து, இன்று லண்டனில் ஒரு வைத்தியராக மாறி இருக்கமுடியாது. தாலியை அறுத்தெறிந்தவர்தான் யைப் போட்டுவிட்டால் என்னாவது என்ற பயம்.

விசாரணைக்கு என வந்த அதிகாரிகளுக்கு ஒரு வெறியும் மோகமும் இருந்தது. பதவி உயர்வு என்ற வெறியும் ஊதிய உயர்வு என்ற மோகமும்தான் அது. அதே நேரத்தில் எல்லா அதிகாரிகளும் காவலர்களும் பதவி வெறியில் இருந்தார்கள் எனக் கூற முடியாது. எனது தாலியை அறுத்தெறிந்தவர்தான் பட்டென்று என் மார்பில் அடித்த வேகத்தோடு, என் சுடிதார் துப்பட்டாவை அப்படியே பிடித்து இழுத்தார். அவர் இப்படிச் செய்வார் என எதிர்பார்க்கவே இல்லை. 'இது தொடக்கம்தான். வெளியே பையன்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உன்னை நிர்வாணமாக்கி விட்டு, வெளியே போய்விடுவேன். பிறகு என்ன நடக்கும் என்று புரிகிறதா?' என முறைத்



நானும் இப்படி எழுதிக் கொண்டிருக்க மாட்டேன். இருவருமே செத்துப் போயிருப்போம். அதனால்தான் சொல்கிறேன். அந்தப் பெண் வைத்தியர் எனக்குத் தெய்வமாகத் தோன்றினார். இன்றும் எனது தினசரிப் பிரார்த்தனையில் அவருக்காகவும் வேண்டிக் கொண்டு வருகிறேன். அவரும் அவரது குடும்பத்தா ரும் நீடூழி வாழ வேண்டும். அதன் பிறகு எனக்கு நடந்த விசாரணைகள் எல்லாம் மோசமாகத் தொடர்ந்தன.

என் கருவைக் கலைத்துவிட வேண்டுமென, இவ்வளவு மெனக்கெட்டவர்கள் எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்ற பயம் என் உறக்கத்தைக் கெடுத்தது. தூங்கும்போது பக்கவாட்டில் கூனிக் குறுகி கைகளால் வயிற்றைப் பாதுகாத்த வண்ணமே படுப்பேன். நான் தூங்கும்போது ஏதாவது ஊசி

தலைமைப் புலனாய்வு அதிகாரியான ரகோத்தமன். ஆனால், அவர் தனிப்பட்ட முறையில் மனசாட்சி உள்ளவராகவே நடந்து கொண்டார். எனக்கு ஏதும் நடந்து விடக் கூடாது என பகல் முழுவதும் தன் பார்வையில் வைத்திருப்பார். எனக்கும், என் கணவருக்கும் நடந்த சித்திரவதைகள் பெரும்பாலும் அவர் இல்லாத நேரங்களில் நடந்தன. சிலவற்றை அவரால் தடுக்க முடியவில்லை. அவருக்கும் மேலாக ஒருவர் உத்தரவிட்டுக் கொண்டு இருக்கும்போது பாவம் அவரால் என்னசெய்ய முடியும்?

என்னைக் கடைசியாகத் தொடர்ந்து 20 நாட்கள் சித்திரவதை செய்து, விசாரித்த 7 ஐ.பி.எஸ். அதிகாரிகளில் தியாகராஜனும் ஒருவர். மிக மோசமான சித்திரவதையைக் கையாண்டவர். நான் கைகூப்பி கதறியபடி அவரது காலில் விழப்போனேன்.

தார். மேலும் ஒரு அடி முன்னே வந்து, சுடிதார் துணி மீது கை வைத்து இழுத்தார். அது கிழியத் தொடங்கியது. அதற்கு மேலும் என்னால் நிற்க முடியவில்லை. படாரென்று விழுந்துவிட்டேன். 'சார் வேண்டாம். நீங்கள் சொல்கிறபடியெல்லாம் கேட்கிறேன் சார். என்னை எதுவும் செய்யாதீங்க' என்று கதறியபடியே அவருடைய காலில் விழுந்து விட்டேன். அப்படியே பார்த்துக் கொண்டிருந்தவர். பேசாமல் சென்று அவரது நாற்காலியில் அமர்ந்துவிட்டார்.

பிறகு, கணனியில் ஏற்கனவே தட்டச்சு செய்து வைத்திருந்த, தாள்களை எல்லாம் அடுக்கி வைத்துக் கொண்டு ஒவ்வொரு தாளாக எடுத்து. அதில் என்ன எழுதப்பட்டிருந்ததோ அதை தன் கைபட எழுதிக் கொண்டிருந்தார்.

(தொடரும்...)

நாம் நேசிக்கும் ஒருவருக்கு மரணம் நேரிடும் பொழுதுதான் நாம் மரணத்தை முதன்முதலாக உணர ஆரம்பிக்கின்றோம். - ஸ்டெல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தாயை இழந்த பிள்ளைகளாய் ஈழத்தில் தவிக்கின்றோம் நாம்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா காலமானார் என்ற செய்தி ஈழத் தமிழ் மக்களுக்குப் பேரிடியாய் அமைந்தது.

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் சுகம் பெற்று வீடு திரும்பி மீண்டும் தமிழகத்தின் முதல்வர் பணி செய்வார் - ஈழத் தமிழர்களுக்குப் பெருந்துணை புரிவார் என்று நம்பியிருந்த வேளை மருத்துவர்களின் கடும் பாட்டையும் கடந்து செல்வி ஜெயலலிதா அவர்களின் உயிர் பிரிந்தது என்ற செய்தியை அறிந்த போது எம் இதயம் நொருங்குண்டன.

தமிழகத்தின் உன்னதமான முதல்வர் என்பதற்கு அப்பால், ஈழத் தமிழ் மக்களின் அவலத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் குரல் கொடுத்தவர் என்ற பெருமையும் அவருக்குரியது. இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய ஒரு பெரும் துணிச்சல் செல்வி ஜெயலலிதா தவிர்ந்த வேறு எவருக்கும் இருந் திருக்காது என்று அடித்துக்கூற முடியும்.

எப்பாடு பட்டும் கச்சதீவை மீட்பேன் என்று கூறுரைத்தவர் இன்றில்லை எனும்போது ஈழத் தமிழ் மக்கள் தாயைப் பிரிந்த துயரைத் தாங்கிக் கொள்கின்றனர்.

ஈடு இணையற்ற தங்கள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களை இழந்த சோகத்தில் தமிழக மக்கள் தவிப்பது கண்டு தாங்கொணாத் துன்பம் அடைகின்றோம்.

தமிழக மக்களின் உன்னதமான வாழ்வுக்காக அவர் அறிமுகப்படுத்திய திட்டங்கள் அற்புதமானவை.

இந்திய தேசத்தின் ஏனைய மாநிலங்களும் முதல்வர் ஜெயலலிதா அறிமுகப்படுத்திய நலத்திட்டங்களை, அபிவிருத்திச் செயற்பாடுகளை தத்தம் மாநிலங்களில் அமுல்படுத்தும் அளவில் அவரின் அறிவார்ந்த- மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் உயர் மதிப்புப் பெற்றுள்ளன.

செல்வி ஜெயலலிதா அவர்களின் மறைவால் தமிழக மக்கள் கண்ணீர் வடிப்பதென்பதற்குள், ஒரு அரசியல் தலைவர் மக்களோடு - கட்சித் தொண்டர்களோடு எங்ஙனம் பழகினார் என்பது புலப்படும்.

இனி யார்க்கும் இப்படி நடக்காது என்பது போல அம்மையார் ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

இந்திய தேசம் அவரின் மறைவுக்குத் தனது துக்கத்தை வெளிப்படுத்தியது. இந்தியப் பிரதமர் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்ட அத்தனை தலைவர்களும் ஜெயலலிதாவின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர் எனில் அதற்குள் இருக்கக்கூடிய உள்ளார்ந்தம் சாதாரணமானதன்று.

தமிழகத்தில் செல்வி ஜெயலலிதாவின் கட்சியை எதிர்த்த - விமர்சித்த எதிர்க்கட்சிகள் கூட, செல்வி ஜெயலலிதா அற்புதமான தலைவர் துணிச்சல் மிகு தீர்மானங்களை எடுக்கவல்ல பெருந்தலைவர். ஏழை மக்கள் சார்ந்த நலத்திட்டங்களை முன்னெடுத்தவர் என்றெல்லாம் புகழாரம் செய்யும் அளவில் அவரின் சேவை மகோன்னதம் பெற்றுள்ளன.

இந்த நேரத்தில் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் எங்கள் இதய அஞ்சலிகளை அம்மையார் ஜெயலலிதாவுக்கு செலுத்தி நிற்கின்றோம்.

தாயே! நாங்கள் ஈழத் தமிழர்கள். உறவுகளைப் பறிகொடுத்து; ஊரிழந்து; சொத்திழந்து; எங்கள் அடையாளங்களையும் இழந்து ஏதும் இல்லா அரசியலமைப்பு சீர்திருத்தம் என்னும் இலவுக்காக காத்திருப்பவர்கள்.

நீங்கள் இருந்தாலாவது புதிய அரசியலமைப்பில் தமிழர்களுக்கு எதுவும் இல்லை என்று எதிர்புரைப்பீர்கள். என்ன செய்வது, எங்கள் தலை விதி உங்களை இழக்க வைத்துவிட்டது.

கச்சதீவு விவகாரத்திலாவது உங்கள் துணிச்சலை எங்கள் ஆட்சியாளர்கள் அறிவர் என்றிருந்தோம் அதனையும் பாழாய்ப்போன எங்கள் தலைவிதி தடுத்து விட்டது.

அனுபவித்தாக வேண்டும் என்றால் அதை யாரும் தடுக்க முடியாது என்ற உண்மையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாம்; சந்தனப்பேழையில் மீளாத் துயில் கொள்ளும் உங்கள் உறக்கத்தை கலைக்க விரும்பவில்லை. அன்னையே! அமைதியாய் தூங்குக.

உங்கள் ஆத்ம பலம் எங்கள் பலமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு எங்கள் இதய அஞ்சலியை உங்களுக்காக்குகின்றோம்.

# யார் ஆட்சி நடத்தினாலும் தேசிய பாதுகாப்பிற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்- கோத்தபாய

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சிறந்த மற்றும் தொழிற்றுறை சார்ந்த பொலிஸ்மா அதிபர்களே பதவிகளை வகித்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புகழாரம் கூறியுள்ளார்.

யார் எவ்வாறு ஆட்சி நடத்தினாலும் தேசிய பாதுகாப்பிற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட கோத்தபாய ராஜபக்ஷ, நாட்டின் பாதுகாப்பு குறித்து கவனம்செலுத்துவதானது இனவாத அல்லது வேறு குழுக்களை தாக்குவது அல்ல என்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிகழ்வின் பின்னர் அங்கிருந்து திரும்பிய கோத்தபாய ராஜபக்ஷவிடம் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்த அழைப்பு குறித்து ஊடகவியலாளர்கள் வினவினர்.

"நான் பதவியிலிருந்த காலத்தில் சிறந்த தொழிற்றுறையைச் சார்ந்த பொலிஸ்மா அதிபர்களே இருந்தனர். எனினும் தற்போது உள்ள பொலிஸ்மா அதிபர் தொடர்பாக பேசுவது சிறந்ததல்ல. 30 வருடங்கள் சேவைக் காலமாக இருந்த போதிலும் அவர்கள் தொழிற்றுறை எனப்பாரக்கும்போது எவ்வாறு செயற்பாடுகளை முன்னெடுப்பது குறித்து அவர்களே தீர்மானிக்க வேண்டியவையாகும் என்றார்.

இதேவேளை வடக்கில் ஒருசில அசம்பாவிதங்கள் இடம்பெற்று வந்தாலும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு செயலாளர் கூறுகின்றார். இது குறித்து நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதற்கு பதிலளித்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர் "புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலுக்கு அமைய அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். புலனாய்வாளர்களின் தகவல் எமக்கு கிடைப்பதில்லை. சமூக வலைத்தளங்கள் மற்றும் இதர பகுதிகளிலிருந்தே நமக்கு தகவல்கள் கிடைக்கினறன.

எனினும் நாடு என்ற வகையில் பாதுகாப்பிற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆட்சியாளர் என்ற வகையில் நாட்டின் பாதுகாப்பு குறித்த அறிவு காணப்பட வேண்டும். பாதுகாப்பு குறித்து முக்கிய கவனம் செலுத்துவதானது இனவாதம் அல்லது ஒரு குழுவினரை தாக்குவது அல்ல. யார் ஆட்சி செய்தாலும் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துவது முக்கியமாகும்" என்று கூறினார்.

அதேவேளை முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ஜி.எல். பீரிஸ் ஆகியோர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் முதல் 100 உறுப்பினர்களிடையே உங்களுக்கும் ஆசனம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர்கள் இதன் போது கேள்வி எழுப்பினர்.

"அரசியல் கட்சிகளை ஆரம்பிப்பதற்கும் எனக்கு எந்தவித தொடர்பும் இல்லை" என்று பதிலளித்தார். (இ-7-10)

# ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்த வந்த ஜனாதிபதியின் விமானத்தில் கோளாறு

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சென்னைக்கு புறப்பட்டு வந்த ஜனாதிபதி விமானத்தில் கோளாறு ஏற்பட்டதால் மீண்டும் டில்லி திரும்பினார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று நண்பகல் 12 மணியளவில் சென்னை வந்து சேர்ந்தார். அவரை தொடர்ந்து ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் இந்திய விமானப்படைக்கு சொந்தமான தனி விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டார். நடுவானில் பறந்த போது. இயந்திரத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதையடுத்து. அந்த விமானம் மீண்டும் டில்லி திரும்பியது. (இ-7-10)

## தண்டனை அபராதம் தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியீடு

வாகன சாரதிகள் இழைக்கும் குற்றங்கள் தொடர்பில் வழங்கப்படும் தண்டனைகள் மற்றும் அபராதம் குறித்து புதிய சுற்றறிக்கையை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வாகன சாரதிகள் இழைக்கும் குற்றங்கள் தொடர்பில் வழங்கப்படும் தண்டனைகள் மற்றும் அபராதத் தொகையின் அளவு பற்றிய திருத்தம் குறித்து தமது கருத்துக்கள் இருப்பின் முன்வைக்குமாறும் தனியார் பேருந்து சங்கங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த முன்மொழிவுகளை இவ் வாரத்துக்குள் எழுத்து மூலம் வழங்குமாறு அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அபராதத் தொகை தொடர்பில் ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் சந்திப்பு இடம்பெற்ற வேளையே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (5-10)

## நிலையான தொலைபேசி தொடர்புகள் அதிகரிப்பு

இலங்கையில் நிலையான தொலைபேசி தொடர்பாடல் தற்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருப்பதாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில்தற்போது பாவனையில 26 இலட்சத்து ஆயிரத்து 196 நிலையான தொலைபேசிகள் உள்ளன. இவற்றில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொலைபேசிகள் கேபிள்கள் மூலம் இயங்கக்கூடியவையாகும்.

1990ஆம் ஆண்டு மொத்தமாக மூவாயிரம் நபர்களே இலங்கையில் நிலையான தொலைபேசி தொடர்பாடலை பெற்றிருந்ததாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது.

தற்போது நாட்டில் இரண்டு கோடி 43 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.


நிலையான தொலைபேசி தொடர்புகளை விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்படும் என்று ஆணைக்குழு மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (5-10)

### திருவாசக முற்றோதல்

கொடிகாமம் வேம்பிராய்- மீசாலை வடக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞானக் கோட்டம் நடத்தும் திருவருட்பா ஓதுதலும் திருவாசகம் முற்றும் ஓதுதலும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 2017. 01.13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. அதிகாலை 4.30 மணியிலிருந்து காலை 7 மணிவரை திருவருட்பா ஓதுதலும் காலை 7 மணியிலிருந்து ஒவ்வொரு தினமும் திருவாசகம் ஓதுதலும் இடம்பெறும். (இ-7)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
கேள்விக் குறியிலிருந்து பெண்ணினம் விலகட்டும். ஆச்சரியக்குறியாய் மாறி அகிலத்தை ஆளட்டும். அதற்காக இளைஞர் சமுதாயமே அணிதிரண்டு வழி சமைப்போம்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ சமூக அமைப்பும் அரசியலையும் பற்றிய கருத்துக்களை இந்தியாவில் பெருக விடுவதற்கு முன் முதலில் அறிவுக் கருத்துக்களை இந்நாட்டில் ஊழி வெள்ளமெனப் பெருக்குங்கள். நமது கவனத்திற்குரி முதல் வேலையாவது நமது மதங்களிலும் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சிறைப்பட்டுக் கிடக்கும். மிகமிக ஆச்சரியமான உண்மைகளைப் புத்தகங்களிலிருந்து வெளியேற்ற வேண்டும். மடங்களிலிருந்து வெளியில் கொண்டு வரவேண்டும். காடுகளிலிருந்து வெளிப்படுத்த வேண்டும். பொறுக்கி எடுக்கப்பட்ட கூட்டத்தினரது திக்கத்திலிருந்து அவை விடுவிக்கப்படவேண்டும். விடுவித்தபின் நாடெங்கும் அவற்றைப் பரப்பவேண்டும். எதற்காக எனில் இந்த உண்மைகள் நாடு முழுவதும் வடக்கிலிருந்து தெற்கு வரையும் மேற்கேயிருந்து கிழக்கு வரையும் இமயமலை முதல் குமரிமுனை வரையிலும் சிந்து நதிமுதல் பிரம்மபுத்திரா நதிவரையிலும் தீயெனப் பாய்ந்து பரவுதற்காகவே.

❖ இந்தியா இறக்குமா? பின் உலகத்தினின்றும் ஞானம் அனைத்தும் இல்லாது போய்விடும். ஒழுக்க நிறைவெல்லாம் ஒழியும். சமயத்தின் மீது கொள்ளும் இனிய அனுதாபமெல்லாம் ஒழியும். இலட்சிய உணர்ச்சியெல்லாம் ஒழியும்.

# கோல்மழை பொழிந்தது நாவாந்துறை சென்.மேரிஸ்



மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் உதைபந்தாட்ட தொடரில் 05.12.2016 அன்று நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழகம் மோதியது.

நடைபெற்ற இப் போட்டியில் 10-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி வாய்ப்பினை தக்க வைத்துள்ளது நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம். (கு)

# ஆஸி.பயிற்சியாளராக மைக்கேல் ஹசி நியமனம்

இலங்கை அணிக்கு எதிரான இருபது-20 தொடருக்கு அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக முன்னாள் வீரர் மைக்கேல் ஹசி நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இந்தப் போட்டிகள் பெப்ரவரி 17,19 மற்றும் 22 ஆகிய திகதிகளில் நடக்கிறது.

அதேசமயம் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்த தொடர் பெப்ரவரி 23 இல் தொடங்குகிறது.

இந்நிலையில் தலைமை பயிற்சியாளரான டேரன் லெக்மன் இந்தியாவில் இருப்பதால், இருபது-20 அணிக்கு தனியாக பயிற்சியாளர் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து இலங்கை அணிக்கு எதிரான இருபது-20 தொடரில் அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக மைக்கேல் ஹசி நியமிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (கு)



# கபிலன் ஹெற்றிக் கோல்

# வடக்கின் சுப்பர் கிங் தொடர் காலிறுதியில் ஊரெழு றோயல்





மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டு கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் உதைபந்தாட்ட தொடரின் (05.12.2016) நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து தீவகம் ஐயனார் அணியுடன் மோதியது. இப்போட்டியின் றோயல் அணி வீரர் கபிலனின் ஹெற்றிக் கோலுடன் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதலாவது அணியாக காலிறுதிக்குள் நுழைந்தது ஊரெழு றோயல் அணி. (கு)

# இன்றைய போட்டிகள்

மயிலங்காடு ஞானமுருகனின் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை (07.12.2016) இரவு 7 மணிக்கு நடைபெற்ற லீக் சுற்றுப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள லீக் சுற்றுக்கான தெரிவுப் போட்டியில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை ஜூனியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# பருத்தித்துறை கொட்டடி துள்ளுமீனை வீழ்த்தி சென்.தோமஸ் இறுதிப்போட்டிக்கு தெரிவானது





மன்னார் மாவட்டத்தில் உள்ள எவர் கிறீன் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய மாபெரும் கபடிச் சுற்றுப்போட்டி 03.12.12016 முதல் 04.12.2016 வரை மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் மன்னார், வவுனியா கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தில் இருந்து 15 கழகங்கள் பங்குபற்றின.

எந்த அணி இறுதிக்குள் நுழைவது என்பதை தீர்மானிக்கும் ஒரு முக்கிய போட்டி 04.12.2016 பருத்தித்துறை-முனை சென் தோமஸ் "பி" அணிக்கும் பருத்தித்துறை கொட்டடி துள்ளுமீன் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

மன்னார் அணிகள் இந்த அரை இறுதிப்போட்டியில் இல்லாமையால் ரசிகர்களின் ஆதரவு மிகக் குறைவாகவே காணப்பட்டது. கிட்டத்தட்ட சமபலத்துடன் களம் புகுந்த இரு அணிகளும் கடும் சவால்களை எதிர் கொண்டே இருந்தது. இதனால் மிக விறுவிறுப்பாக போட்டி சுவாரஸ்யமடையத் தொடங்கியது.

எந்த அணி வெற்றிபெறும் என்று இறுதி வரையும் யாராலும் கணிக்க முடியாதவாறு போட்டியின் நிலைமைகள் அடிக்கடி மாறிமாறி கொண்டே இருந்தன. இருப்பினும் மிகச் சிறிய சென் தோமஸ் "பி" அணியின் ஆதிக்கத்துடன் முதற் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் நிலைமைகள் அதே போக்கில் நகர்ந்து கொண்டிருந்தன. இதனால் இரு அணிவீரர்களின் ரசிகர்களும் யார் வெற்றிபெறுவார்கள் என்பதை பார்க்க ஆங்காங்கே அலைமோந்து கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது சென் தோமஸ் "பி" அணி 14 :11 என்ற புள்ளிகளுடன் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது. (கு)

# விளையாட்டு பிரபலங்கள் ஜெயலலிதாவுக்கு இரங்கல்



மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு விளையாட்டு பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சென்னை அப்பலோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 3 மாதங்களுக்கு மேலாக சிகிச்சை பெற்று வந்த ஜெயலலிதா நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனளிக்காமல் காலமானார்.

இதைத் தொடர்ந்து உடல் அவரது சொந்த வீடான போயஸ் கார்டனுக்கு கொண்டு செல்லப் பட்டது.

அவருக்கு பொதுமக்கள், தொண்டர்கள், பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் என பலரும் வந்து அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் விளையாட்டு பிரபலங்களான செஸ் வீரர் விஸ்வநாத் ஆனந்த், கிரிக்கெட் வீரர் வீரேந்திர சேவாக் உட்பட பல விளையாட்டு வீரர்கள் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு டுவிட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளனர். (கு)

## யாழ்.வர்த்தகர்கள்...

ளும் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.வணிகர் கழகம் நேற்று மதியம் விடுத்த அவசர அறிவிப்பை அடுத்தே வர்த்தகர்கள் தமது கடைகளை பூட்டி துக்கம் அனுஷ்டித்தனர்.

அந்த அறிவிப்பில் தமிழக முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஆற்றணா துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்.

ஜெயலலிதா கடந்த முப்பது வருடங்களாக அரசியலில் தீவிரமாக செயற்பட்டு தமிழக முதலமைச்சராக தெரிவானவராவார். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் துணிச்சல் மிக்கவராக செயற்பட்டு வந்ததோடு, மக்களுக்கு பல நல அரிய திட்டங்களை செயற்படுத்தி வந்திருந்தார்.

தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் போது அவர் ஈடு இணையவற்றவராக திகழ்ந்தார். அதே வேளை செல்வி ஜெயலலிதா உலக தமிழ் மக்களால் மதிக்கப்பட்ட தலைவருமாவார்.

குறிப்பாக இலங்கையில் தமிழர்கள் அவதியுறும் போதெல்லாம் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு எம்மக்களின் நலத்திற்காக குரல் கொடுத்ததை மறக்க முடியாது.

தமிழ்நாடு சட்டசபையில் இலங்கை தமிழ் மக்கள் நலன் சார்ந்த துணிச்சல் மிக்க தீர்மானங்களை நிறைவேற்றி எமது மக்களுக்கு ஆதரவாக செயல்பட்டமையை ஒரு போதும் மறக்க முடியாது.

அன்னாரது பூதவுடல் அடக்கம் செய்யும் இன்றைய தினம் (நேற்று) அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று இரண்டு மணியுடன் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி, கறுப்பு கொடிகளை பறக்க விடுமாறும் மேலும் அத்தியாவசிய தேவை கருதி உணவாகங்கள், மருத்துவ நிலையங்களை திறந்து வைக்குமாறு யாழ். வணிகர் கழகம் அறிக்கை விட்டிருந்தது.

மேலும் வரலாறு எங்களுக்கு தனித்துவமான பல தலைவர்களைத் தந்திருக்கிறது. அத்தகைய தலைவர்களில் ஒருவரான மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதா அம்மாவின் ஆத்மா இளைப்பாறிய செய்தியால் கண்ணீர் வடிக்கின்ற ஒட்டுமொத்த தமிழ் குலத்தவரோடு நாமும் கரைந்து போகிறோம்.

அவர் வரித்துக்கொண்ட இலட்சியத்துக்காக கொண்டிருந்த உறுதப்பாடும் அர்ப்பணிப்புக்களும் வியக்கவும் நயக்கவும் தக்கவையாகும். ஈழத்தமிழர்களின் ஆயுதரீதியிலான விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட போது மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரனின் அடிச்சுவட்டில் செல்வி ஜெயலலிதா காட்டிய ஆதரவு மெச்சத்தக்கது.

ஈழத்தமிழர்கள் மீது கரிசனை கொண்ட ஒரு பெரும் தலைவரை ஈழத்தமிழினம் இழந்தது கவலைக்குரியதே எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் பிற்பகல் இரண்டு மணியுடன் யாழில் உள்ள பெரும்பாலான வர்த்தகர்கள் தமது கடைகளை பூட்டி, கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு துக்கதினம் அனுஷ்டித்தனர்.

இதனால் யாழ்.நகர் நேற்று பிற்பகலுடன் வெறிச்சோடி காணப்பட்டது. (செ-4)

## மறைந்த தமிழக முதல்வருக்கு...

யளவில் சபை ஆரம்பமாகிய போது அவைத்தலைவர் மறைந்த தமிழக முதல்வர் ஜெயலிதாவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைவரும இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என அறிவிப்பு செய்தார்.

அறிவிப்பின் பின்னர் அனைத்து உறுப்பினர்களும் தமது இருக்கைகளில் இருந்து எழுந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழக முதலமைச்சரின் மறைவுக்கு அஞ்சலி உரை ஒன்றை சபையில் ஆற்றியிருந்தார்.

முதலமைச்சரின் அஞ்சலி உரையை அடுத்து தமிழக முதலமைச்சரின் மறைவுக்கு மேலும் ஈழத்தவர்களின் அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவிக்கும் வகையில் பத்து நிமிடங்களுக்கு சபையை ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் அறிவித்து சபையை ஒத்தி வைத்தார்.

அதன் பின்னர் பத்து நிமிடங்களில் சபை மீண்டும் கூடியது. இதன் போது எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பான விடயம் எடுத்துக்கொளளப்பட்டது. அந்த விடயம் நிறைவுக்கு வந்ததும். மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் தமிழக மக்களின் துக்கத்தில் பங்கெடுக்கும் வகையிலும் சபையை நாளை வரை ஒத்திவைப்பதாக அவைத்தலைவர் அறிவிப்பு செய்தார்.

இதன் போது உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஜெயலலிதா ஈழத்தமிழர்கள் மீது கொண்டிருந்த பற்று, கரிசனை தொடர்பிலும் தான் ஜெயலலிதாவை சந்தித்த போது நடைபெற்ற விடயங்கள் என்பவற்றை சபையில் உரையாற்றி அவருக்கு கௌரவம் அளிக்கும் வகையில் வடக்கு மாகாண சபையின் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அவைத்தலைவர் உட்பட ஏனைய உறுப்பினர்களின் ஒப்புதலுடன் வடக்கு மாகாண சபையின் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது. இந்நிலையில் சபை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு. இன்றைய தினம் மீண்டும் சபை கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## எழுதுமட்டுவாழ் பகுதியில்...

மீற்றர் ரக எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி மேற்படி தோட்டக்காணியை விவசாயியொருவர் உழவு இயந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார்.

அப்போது தகரம் ஒன்று தென்பட்டுள்ளது. அதனை மண்வெட்டியால் அகற்ற முற்பட்ட போது தகரத்தின் கீழ் பெட்டிகளில் எறிகணைகள் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் இருந்த நிறுவனத்திற்கு விவசாயியால் தெரியப்படுத்தப்பட்டது.

அவர்கள் அப்பகுதியை பார்வையிட்டு அதற்குள் அதிக வெடிபொருள் இருக்கலாம் என்று தெரிவித்ததால் கிராம சேவகர் ஊடாக கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இவ்விடயம் பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் அப்பகுதியில் முன்னர் இராணுவ முகாம் அமைநதிருந்த காரணத்தினால் இராணுவத்துக்கும் குறித்த விடயம் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று மாலை ஆயுதங்கள் இருந்த குழி தோண்டப்பட்டு அதற்குள் இருந்து 60 மில்லிமீற்றர் ரக எறிகணைகள் ஒரு தொகை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட எறிகணைகள் நீதிமன்ற அனுமதி பெற்று விரைவில் அழிக்கப்படவுள்ளது.

2012ஆம் ஆண்டு வரை எழுதுமட்டுவாழ் பகுதி இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலய மாககாணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-89)

## ஜெயலலிதாவை ஈழத்தமிழர்...

ஜெயலலிதா ஜெயராம் அவர்களின் மறைவையொட்டி தமிழ் மக்கள் பேரவை ஆழ்ந்த கவலையடைகிறது.

தமது முதல்வரை இழந்து நிற்கும் தமிழக மக்களின் துயரில் ஈழத்தமிழர்கள் சார்பில் தமிழ் மக்கள் பேரவை தனது இரங்கல்களை தெரிவிக்கின்றதோடு உங்களின் துயரையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

அமரர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஈழத்தமிழர்கள் சார்பில் ஆற்றிய காத்திரமான பங்களிப்புகள் என்றும் எம்மக்களால் நன்றியுடன் நினைவு கூரப்படும்.

ஈழத்தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டது இனப்படுகொலையே என்றும், அதற்கு சர்வதேச விசாரணையே அவசியம் என்பதையும், ஈழத்தமிழ் மக்கள்தமது அரசியல் தலைவிதியை தாமே தீர்மானிக்கும் தகைமையுடையவர்கள் என்பதையும், மிக ஆணித்தரமாக, சட்டசபைத்தீர்மானங்களாக வெளிப்படுத்தி, சர்வதேச அரங்கில் எமது கோரிக்கைகளுக்கு வலுச்சேர்த்தவர்

04ம் பக்கம் பார்க்க....

## அரசியல் வானில் பிரகாசி...

தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அறுபத்து ஏழாவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போது உரையாற்றும் போதே வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றையதினம் எம் எல்லோரையும் துன்பத்தில் ஆழ்த்தும் ஒரு நிகழ்வு பற்றி இவ் உயரிய சபையில் பேசவேண்டியுள்ளது. தமிழ் நாட்டு அரசியலில் இரும்புப் பெண்மணி என்றழைக்கப்பட்ட செல்வி ஜெயலலிதா ஜெயராம் காலமானது எம் எல்லோருக்கும் மிகுந்த சோகத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வால்வெள்ளி ஒன்று அரசியல் வானில் பளிச் சென்று பிரகாசமாகி நின்று பின்னர் திடீரென மறைந்து விட்டது.

அண்மையிலே வட இந்திய பெண் ஊடகவியலாளர் சிமிகரைவால் என்பவருக்கு செல்வி ஜெயலலிதா ஜெயராம் ஆங்கிலத்தில் அளித்த ஒருபேட்டி இணையத்தளத்தில் வெளியாகியிருந்தது. அதைக் கேட்கும் போதுதான் சூழலானது எவ்வாறு ஒரு மனிதரை முழுமையாக மாற்றக்கூடிய வலுவுடையது என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

மிக மெல்லிய சுபாவங் கொண்ட, கல்வியில் அதிகம் சிரத்தை கொண்ட, செழிப்பான ஒரு மென் மையான சூழலில் வளர்ந்த ஒருவர் எவ்வாறு பல விதமான முரட்டுச் சூழல்களை எதிர்நோக்க வேண்டிவந்ததால் சாதுமிரண்டது போன்று மிகவும் திடமான இரும்புப் பெண்மணியாக அவர்மாற வேண்டி வந்தது என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

எம்.ஜி.ஆர் அரசியல் வானில் மின்னியபோது அது அவருக்குப் பெருமை சேர்த்தாலும் அவருக்குப் பாரிய இடர்களையும் இன்னல்களையும் அரசியலில் ஏற்படுத்தவில்லை.

ஆனால் செல்வி ஜெயலலிதா ஒரு பெண்ணாக ஆணாதிக்க சூழலிலே தனித்து நின்று வெற்றி பெற்றார் என்பது அவரின் திடசங்கற்பத்தையும் உழைப்பையும் விடாமுயற்சியையும் கெட்டித்தனத்தையும் வெளிப்படுத்துகின்றது. அண்மையில் அவரின் அழைப்பின் பேரில் அவரைச் சென்று சந்திப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும் போது தான் அவர் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விரைவில் குணமடைந்து வருவார் என எதிர்பார்த்திருந்தோம். காலன் அவர் உயிரைப் பறித்துக் கொண்டுபோய்விட்டான்.

"அம்மா" என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அவர் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது பாரதநாட்டு அரசியலிலும் முக்கிய பங்குவகித்தார். அவர் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாடு பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேலும் பல துறைகளிலும் மிக உன்னத நிலையை அடைந்தது. தமிழின் மீதும் தமிழ் மக்கள் வாழ்வின் மீதும் தமிழ் மக்கள் எதிர்காலம் மீதும அவர் மிக்க பற்றுறுதி கொண்டிருந்தார். கரிசனையுடன் அவர் தனது அரசியல் நடவடிக்கைகளை எடுத்துவந்தார். பெண் குலத்திற்கு எடுத்துக்காட்டாக அவர் விளங் கினார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் பாதுகாப்பாக வாழவும் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய சூழலை ஏற்படுத்தவும் வேண்டும் எனக் கருதி அவர் முனைப்புடன் செயற்பட்டார். தமிழ்ச் சமுதாயம் தமக்காகக் குரல் கொடுத்த ஒருபலம் மிக்க அரசியற் தலைவரை இழந்துவிட்டது. அவர் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதை விட எம்மால் அவர் சார்பாக வேறு எதையும் இத்தருணத்தில் செய்யமுடியாதிருக்கின்றது என்பது மனவருத்தத்தைத் தருகின்றது.

எம் மக்களினது ஒன்றுபட்ட சோகத்தினையும் மனச சுமையினையும் தமிழ்நாட்டு மக்களுடன் இத் தருணத்தில் பகிர்ந்து கொள்கின்றோம் என தெரிவித்தார். (இ-4)

## தொடர்ந்தும்...

நேற்றைய அமர்விலேயே இந்த முடிபு எட்டப்பட்டுள்ளது. வட மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவராகப் பதவி வகித்து வரும் ஈ.பி.டி.பியை சேர்ந்த தவராசாவிற்கு பதிலாக தவநாதனை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர 2016.11.01 ஆம் திகதியிடப்பட்ட கடிதமொன்றை வடமாகாண ஆளுநருக்கு முகவரியிட்டு முதலமைச்சருக்கும் அவைத்தலைவருக்கும் அனுப்பியிருந்தார்.

இக் கடிதத்தின் பிரதி முதலமைச்சர், அவைத்தலைவர் ஆகியோருக்கு 2016.11.12 ஆம் திகதி கிடைக்கப் பெற்றது. எனினும் இக் கடிதம் முறைப்படியாக முகவரியிடபடவில்லை என சுட்டிக்காட்டியும், ஆகையால் அது தொடர்பாக எம்மால் மேல் நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்தும், இதற்கு முன்னைய சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பாக எமக்கு முகவரியிடப்பட்ட 2014.04.25 ஆம் திகதிக் கடிதத்தின்நிழற்பிரதியை இணைத்து 2016.11.15ஆம் திகதி ஆளுநருக்கு அவைத்தலைவரால் கடிதம் அனுப்பப்பட்டது.

இந்தநிலையில் சி.தவராசாவினால் 2016.11.17ஆம் திகதி இடபட்ட கடிதம் 2016.11.18 ஆம் திகதி எமக்கு கிடைத்தது. அதில், மேற்படி விடயம் சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரினால் 2016.11.01 ஆம திகதியிடப்பட்டு தங்களிற்கும் எனக்கும் ஏனைய சிலருக்கும் பிரதியிடப்பட்டு ஆளுநருக்கு எழுதப்பட்ட கடிதம் தொடர்பாக வடக்கு மாகாணசபையின் எதிர்கட்சித் தலைவர் பதவிக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனை நியமிக்குமாறு சிபார்சு செய்திருப்பது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகளைத்தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் என்னைத் தொடர்பு கொண்டு நானே தொடர்ந்தும் எதிர்க்கட்சித்தலைவராக பதவிவகிக்க வேண்டும் என்றும் அதற்கு தங்கள் பூரண ஆதரவு உண்டு என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆதலினால் மேற்படி விடயம் தொடர்பாக ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடித் தங்கள் முடிவினை எடுக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் முறைப்படியாக அவைத்தலைவருக்கு முகவரியிடப்பட்டு 2016.11.01 ஆம் திகதியிடப்பட்டு ஆளுநர், முதலமைச்சர் இவர்கள் இருவருக்கும் பிரதியிடப்பட்ட கடிதம் பேரவைச் செயலகத்துக்கு 2016.11.23ஆம் திகதி மாலை 5.15 மணிக்குக் கிடைத்திருந்தது. இந்த கடிதம் சபை நடவடிக்கை குழுவில் ஆராயப்பட்டு, இன்றைய அமர்வில் (நேற்று) முடிவை அறிவிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் வடக்கு மாகாண அவைத்தலைவர் உத்தியோக பூர்வ முடிவை சபையில் அறிவித்தார். அதில், உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மேற்குறிப்பிட்ட கடிதத்தை எழுதியிருக்காது விடின், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரின் கடிதத்திற்கமைய நடவடிக்கை எடுத்திருப்பேன். ஏனெனில் இவ்வாறு எழுதப்பட்ட முன்னைய கடிதங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

எனினும் தம்மை எதிர்க்கட்சித் தலைவராகத் தொடரவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோருவதாக தெரிவித்திருப்பதால் விடயததை முழுமையாக ஆராய்நது முடிவெடுக்கும் கடமையும் பொறுப்பும் எம்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை நான் தெளிவாக உணர்நதேன்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி சட்ட ஏற்பாடுகளின்படி நிர்ணயிக்கப்படும் ஒன்றல்ல. அரசியலமைப்பிலோ மாகாண சபைகள் சட்டத்திலோ இந்தப் பதவி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் பாராளுமன்ற நிலையியல் .கட்டளைகளிலோ, வடக்கு மாகாண நடைமுறை விதிகளிலோ இப் பதவி பற்றி எதுவும் குறிபபிடப்படவில்லை. இது ஒரு மரபு வழிவந்த ஒன்றாகவே மாகாண சபைகளிலும் இருந்து வருகிறது என தெரிவித்து மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஒருவரை தெரிவு செய்வதில் நாட்டில் உள்ள ஏனைய மாகாண சபைகளில் இடம்பெற்ற முன்னுதாரணங்களை எடுத்துக்காட்டி தொடர்ந்தும் எதிர்க்கட்சி தலைவராக சின்னத்துரை தவராசவே செயற்படுவார் என்ற முடிவினை அவைத் தலைவர் அறிவித்தார். இந்த முடிவுக்கு உறுப்பினர்கள் எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. (இ-4)

## இலங்கை கணக்காளர் சேவைக்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

இலங்கை கணக்காளர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள் துறைசார் விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:-
10.12.2016 (2 PM-5 PM)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
021 222 8148, 0776071954,
0778469721

(சி-6591)

## சுயமாக பயிற்சி செய்யக் கூடிய

தரம் 6 · தரம் 10

**கணிதப் பயிற்சி நூல்**

உதாரணங்கள் விடைகளுடன்

ஆசிரியர்கள்

V.குகநாதன் · S.V.பாலமுரளி

அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும்

தரம் 7 நூல் தை மாதம் முதல் வாரத்தில்...

## வீடு வாடகைக்கு உண்டு

மருத்துவ பீடத்திற்கு அண்மையில் ஆடிய பாதம் தெருவில் (இல.100) 3 படுக்கையறை, உபசரிப்பறை, சாப்பாட்டறை, குசினி, குளியல் அறை (Attached Bathroom) உள்ள வீடும்,

அத்துடன் கறாஜ் (Garage) ஒரு அறை, குசினி, Toilet உள்ள வீடும் வாடகைக்கு உண்டு.

இவை தனியாகவோ அல்லது சேர்ந்தோ வாடகைக்கு கொடுக்கப்படும்.

(பாதுகாப்புக் கூடிய சுற்று மதிலுடன் கூடிய வீடு)

தொடர்புகளுக்கு:-
0722447339, 0777320799

(6847)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-6589)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 11.11.2016 வெள்ளிக்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### தாமோதரம்பிள்ளை சண்முகநர்தன்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.12.2016 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 11.12.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நினைவுப் பேருரையும் மதிய போசன நிகழ்வும் அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபத்தில் 11:30 மணிக்கு நடைபெறும். அத்தருணங்களில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அல்லையம்பதி, துன்னாலை. · இங்ஙனம்-குடும்பத்தினர்.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாக வும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சுத்தம் செய்யப்பட்டது 1kg 350/- மட்டும்
U.S.A பாம்

குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை
0778689500

(6826)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் இராசேந்திரம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசேந்திரம் 06.12.2016 அன்று காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும், கல்பனா, பிரதீபா (சிரேஷ்ட விரிவுரையாளர் புவியியல் துறை-யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும், மதுரா, நிறோஜன் (திட்டப் பொறியியலாளர்-நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), நித்தியா (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும், லோகநாதன் (பொது முகாமையாளர்-பனை அபிவிருத்திச் சபை-யாழ்ப்பாணம்), விபுலன் (ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி), உயிதன் (மருந்துக் கலவையாளர்-கிளிநொச்சி வைத்தியசாலை), சுரமஞ்சரி (HNB-யாழ்ப்பாணம்), ஜனார்த்தனன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும், வைஸ்ணவி, ஐஸ்வர்யன், சுவிஷனா, பிரணாத், ஆரிஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 07.12.2016 இன்று பி.ப 2.00 மணிக்கு அச்சுவேலியில் அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழுக்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு:-
லோகநாதன்-0777176322,
நிறோஜன்-0776660258,
விபுலன்-0771129310

தகவல்:-
குடும்பத்தினர்

(6856)

## அதிரடி விலைக்குறைப்பு!!



என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

இப்பொழுது



அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் பிறிண்டிங் வேலைகளுக்குமான விலைகள் சடுதியாக குறைக்கப்பட்டுள்ளன!

எமது உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களை நாம் இப்போது குறைந்த விலையில் நேரடியாக இறக்குமதி செய்வதனால் இவ் விலைக்குறைப்பானது சாத்தியமாகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**3 வருட உத்தரவாதத்துடன்**

| ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற் இல்லாமல்) High Quality | ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற்றுடன்) High Quality | ஒருபக்க ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை (Backlit Light Board) High Quality |
|---|---|---|
| ~~250/-~~ | ~~350/-~~ | ~~650/-~~ |
| 190/- சதுர அடி | 250/- சதுர அடி | 490/- சதுர அடி |

ANDRA DIGITAL IMAGE

அதி உயர்தர டிஜிற்றல்பனர் பிறிண்டிங்
சதுர அடி ~~50/-~~ 38/- இலிருந்து

டிஜிற்றல் பிறிண்டிங் துறையில் 200க்கு மேற்பட்ட கொழும்பு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்.

379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7279 / 021 222 8929 / 077 7481696

(C-6567)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.